விலை ரூபா 1–50

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

மலர் 29 ஆடி 30 துல்ஹஜ் 19 இதழ் 175
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 15-8-1987

# இலங்கை - இந்திய ஒப்பந்த முட்டுக்கட்டைகள் நீங்கும்!

## –ராஜீவ் நம்பிக்கை

[புதுடில்லி]

"இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் உள்ள சில அம்சங்களை அமுல் நடத்துவதில் சில முட்டுக்கட்டைகள் உள்ளன என்பது உண்மையே. ஆனால் அந்த முட்டுக்கட்டைகள் விரைவில் நீங்கிவிடும் என யாம் நம்புகிறேன்.

இலங்கைத் தமிழ் மக்களின் பாதுகாப்பு பாதிக்கப்படுவது குறித்து தமிழ்ப் பகுதிகளிலிருந்து தற்போது தகவல்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை

இவ்வாறு இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ் காந்தி தெரிவித்தார்.

புதுடில்லியில் எல்லைக் காந்திக்கு "பாரத ரத்னு" விருது வழங்கிய வைபவத்தை அடுத்து நிருபர்களிடம் பேசிய போதே திரு. காந்தி மேற்கண்டவாறு கூறினர்.

## ஆஸி. கிரிக்கெட் குழுவின் பயணம் ரத்து

மெல்போண், ஆக. 14

அடுத்தமாதம் இடம்பெறவிருந்த அவுஸ்திரேலிய கிரிக்கெட் குழுவின் இலங்கை விஜயம் இலங்கையிலுள்ள பதற்ற நிலைமை காரணமாக ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

# "இலங்கை-இந்திய ஒப்பந்தம்: ஸ்ரீ. ல. சு. கட்சி நிராகரிக்காது!"

(நமது விசேட நிருபர்)

"ஸ்ரீ. ல. சு. க. பதவிக்கு வந்தால் இலங்கை இந்திய ஒப்பந்தம் நிராகரிக்கப்படமாட்டாது. இந்தியாவுடன் பேச்சுக்களை நடத்தி இலங்கைக்கு பாதகமாக ஒப்பந்தத்தில் உள்ள அம்சங்களைமாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்" என்று திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக நமது விசேட நிருபருக்கு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா வழங்கிய பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அப்பேட்டியில் அவர்மேலும் தெரிவித்ததாவது: 'இலங்கை இந்திய ஒப்பந்தம் இரு நாடுகளுக்குக்கிடையே ஏற்படுத்தப்பட்டதொன்றாகும்.

எனவே இதனைக் கிழித்தெறிவதோ, அல்லது நிராகரிப்பதோ முடியாத காரியமாகும்.

ஸ்ரீ. ல. சு. க பதவிக்கு வந்தால் இந்த ஒப்பந்தம் குறித்து இந்தியாவுடன்பேச்சுக்களை நடத்தும் இந்தியா விரும்பினால் இந்த ஒப்பந்தத்தில் இலங்கைக்கு பாதகமான அம்சங்களை திருத்தியமைக்க ஸ்ரீ. ல. சு. க. முயற்சிகளை மேற்கொள்ளும்.

ஸ்ரீ ல சு க. ஆட்சியில்அணிசேராக் கொள்கை தீவிரமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. இதன் காரணமாக சகல அணிசேராநாடுகளும் எமக்கு உதவின.

ஆனால் ஜே ஆர். ஜயவர்த்தன அரசாங்கம் இஸ்ரேல், பாகிஸ்தான் தென்னுபிரிக்காவுடன் இராணுவத் தொடர்

(8ம் பக்கம் பார்க்க)

## ஜே. ஆருக்கு 'கராட்டி' கறுப்புப்பட்டி

(கொழும்பு)

இலங்கை ஜனதிபதி ஜே ஆர். ஜயவர்த்தனவுக்கு பிரபல ஜப்பானிய சமூக சேவையாளரான திரு. றியோச்சி

[5-ம் பக்கம் பார்க்க]

## கிழக்கில் ஈரோஸ் ஆயுத ஒப்படைப்பு; இன்று பலாலியில்

(யாழ்ப்பாணம்)

ஈழம்புரட்சிகர அமைப்பு (ஈரோஸ்) மட்டக்களப்பில் தனது ஆயுதங்களை நேற்று கையளித்தது. இந்திய-இலங்கை இராணுவத்தினர் முன்நிலையில் ஈரோஸின் இந்த முதற்கட்ட ஆயுதக் கையளிப்பு இடம்பெற்றது. இரண்

(8ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் பரவலாக இந்திய இராணுவம்

(மட்டக்களப்பு)

இந்திய அமைதிகாக்கும் படையினர் பெருந்தொகையில் நேற்று மட்டக்களப்பு வந்து சேர்ந்தனர்.

(8ம் பக்கம் பார்க்க)

## பரீட்சை மண்டபத்தில் மர்மநபர் வினுத்தாளைபெற்றுகொண்டு தலைமறைவானுர்

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. உயர்தரப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்த பாடசாலை ஒன்றுக்குள் புகுந்திருந்த இளைஞர் ஒருவர் வினுத்தாள் வழங்கப்பட்டதும், அதனை எடுத்துக் கொண்டு திடீரென வெளியே வந்து மோட்டார்

(5-ம் பக்கம் பார்க்க)

## கோட்டை மிதிவெடி விபத்து: ஆபத்தான நிலையிலிருந்த இந்திய லெப். விக்ரம் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டை முகாமிற்கருகில் கடந்த புதன்கிழமை கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த சமயம் திடீரென வெடித்த மிதிவெடி ஒன்றில் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த 'மெட்ராஸ் ரெஜிமென்ட்' 8-வது பொறியியல் பிரிவைச் சேர்ந்த லெப்டினன்ட் பங்கஜ் விக்ரம் (வயது 23 மத்திய பிரதேசம்) நேற்று ஆஸ்பத்திரி அதிதீவிர

(5ம் பக்கம் பார்க்க)

## பொதுமக்களுக்கு எச்சரிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ் கோட்டை முகாமை சுற்றிவரவுள்ள பகுதிகள்லிருந்து கண்ணிவெடிகளை அகற்றும் வரை அப்பகுதிகளில் பொதுமக்களை நடமாடவேண்டாம் என்றுஇந்திய அமைதிப் படையின் யாழ். கோட்டை முகாம் பொறுப்பதிகாரி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சிறிலங்கா இராணுவத்தினர் வசம் யாழ். கோட்டை முகாம் இருந்த காலத்தில் அவர்களால் முகாமை அண்மித்த பகுதிகளில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (மா)

## இன்று இந்தியாவின் 40வது சுதந்திரதினம்

(புதுடில்லி)

நவ இந்தியாவின் 40-வது சுதந்திரதினம் இன்று கொண்டாடப் படுகிறது.

புதுடில்லி செங்கோட்டையில் பிரதமர் திரு ராஜீவ் காந்தி இந்திய தேசியக் கொடியை ஏற்றிவைத்து நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்துவார்.

இதனை அடுத்து இடம் பெறும் முப்படைகளின் அணி வகுப்பையும் பிரதமர் ஏற்றுக் கொள்வார்.

**தமிழ்நாட்டில்**

இந்திய சுதந்திரதின கொண்டாட்டங்கள் தமிழக

((5ம் பக்கம் பார்க்க)

## இந்திய தளபதி வருகை

[யாழ்ப்பாணம்]

இலங்கையில் இந்திய சமாதான நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவுள்ள இந்திய இராணுவத்தின் தென்பிராந்திய தளபதி லெப். ஜெனரல் திபெந்தர்சிங் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

நேற்றுக்காலை இந்திய விமானப்படை விமானமூலம் பலாலி விமான நிலயம் வந்தஅவரை

[5ம் பக்கம் பார்க்க]

## விமான விபத்திலிருந்து றீகன் மயிரிழையில் உயிர் தப்பினுர்!

வாஷிங்டன், ஆக், 14

அமெரிக்க அதிபர் பயணம் செய்த விமானம் ஒன்று எதிரே வந்த ஹெலிகாப்டர் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாக இருந்தசமயம் தெய்வாதீனமாக அவ்விபத்து தவிர்க்கப்பட்டது என படப்பிடிப்பாளர் ஒருவர் தெரிவித்தார். என்னும் அந்தப் படப்பிடிப்பாளர் விபத்து இடம்பெறும் என எதிர்பார்க்கப்பட்ட வேளையில் விமானமும் ஹெலிகாப்டரும் அருகருகே சென்றபோது அதனைப்படம் பிடித்துக்கொண்டார்.

## சூடுபட்ட மனித சடலம் கிணற்றில் இருந்தது!

(பலாலி)

காங்கேசன்துறை பெற்றோல் நிலையத்துக்கு அண்மையில் உள்ள கிணறு ஒன்றுக்குள் மனிதசடலம் ஒன்றுகிடக்கக் காணப்பட்டது.

காங்கேசன் துறைப் பகுதி நிலைமை சீரானதையடுத்து மக்கள்தமது இருப்பிடங்களுக்கு வந்துகொண்டிருக்கின்றனர்கள்.

இவ்விதம்வந்து கொண்டிருக்கும் மக்கள் தமதுவீடுகளை துப்பரவு செய்து கிணற்றை இறைக்கும்போது பலவகைப் பொருள்கள் அவற்றில் இருக்கக் காணப்பட்டன

ஆனல் காங்கேசன்துறை பெற்றோல் நிலையத்துக்கருகில்

(5ம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகம் பற்றி எமக்கு தகவல் இல்லை!

### – திலீபன்

[எம். வாமதேவன்]

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் வடக்குக் கிழக்கு இணைந்த இடைக்கால நிர்வாக அமைப்பு சம்பந்தமாக எந்தவிதமான தகவல்களையோ அதுபற்றிய விளக்கங்களையோ இந்திய மத்திய அரசு எமக்கு அறிவிக்கவில்லை. இடைக்கால நிர்வாகத்தில் நாம் பங்குபற்றுவது பற்றியும் இதுவரை ஆராயவில்லை"

இவ்வாறு தமிழீழ விடுதப்புலிகள் இயக்க அரசியல் பொறுப்பாளர் திலீபன் நேற்று நடத்தியப த்திரிகையாளர்மகாநாட்டின்போது தெரிவித்தார்.

கிழக்கிலங்கையில் சிறிலங்கா அரசபடையினரின் பயங்கர தாக்குதல் நடவடிக்

(5ம் பக்கம் பார்க்க)

## நிர்வாகம் செப்டெம்பர் முற்பகுதியில் அமையும்

(புதுடில்லி)

இலங்கை இனப்பிரச்னை தீர்வு தொடர்பாக கைச்சாத்திடப்பட்ட புதிய ஒப்பந்தப்படி வடக்கு – கிழக்கு இணை

[8ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல தரமான தேங்காய் (Fresh Coconuts) விற்பனைக்கு உண்டு. 25 க்கு மேல் ஓடர் கொடுத்தால் வீடுகளுக்கும் அனுப்பலாம். கடிதமூலமும் ஓடர்பண்ணலாம். 96, அம்பலவாணர் றோட், அத்தியடி, யாழ்ப்பாணம். [சி-0334]

திருமண பட்டுப்புடவைகள் காஞ்சிபுரம், ½X½, சில்க் அன் சிபோன், கொட்டன், காஞ்சிபுரம் போன்ற நவீன சேலை வகைகளை பெற்றுக்கொள்ள: அரஸ் ஜவுளியகம், 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24001. சி-0130

Alsation Female Pup [அல்ஷேசன்] 2½ மாதக் குட்டி ஒன்று விற்பனைக்கு உண்டு. 96, அம்பலவாணர் றோட், அத்தியடி, யாழ்ப்பாணம் [சி- 0335]

சீ. எல். தொடர் இலக்கமுள்ள ஏபோட்டிக் கார், 900 வோற்ஸ் சக்தியுள்ள ஜெனரேற்றர் ,2032 I 20'' சொனி ரெலிவிஷன் உடன் விற்பனைக்குண்டு. உரிமையாளர் வெளிநாடு செல்வதால்பொருள்களை மலிவு விலையில் பெற அரியசந்தர்ப்பம். உரிமையாளர்: வேலன் அமிர்தலிங்கம், ''இலட்சுமி இல்லம்'' பொன்னுவளை அம்மன் கோவிலடி, காரைநகர். சி-0344

நல்ல நிலையிலுள்ள 18'' நாஷனல் கலர் ரெலிவிஷன், 300 வீடியோ டெக், சகல இன ரெலிவிஷன் ரியூனர், ரியூப், Flyback, கபினேற் மற்றைய உதிர்பாகங்களும், National [300, 370, 7000] Funai வீடியோ டெக்கிற்குரிய ரான்ஸ்போமர், RF Converter, Motor மற்றைய உதிரிப்பாகங்கள் உடன் விற்பனைக்குண்டு. விபரங்களிற்கு: Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவையருகாமை], யாழ்ப்பாணம். சி-0351

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### திருமதி தவமணி அம்பிகைபாகன்

(ஓய்வுபெற்ற ஆசிரியை) கச்சாய், கொடிகாமம்.

தோற்றம்: 21-01-1929

மறைவு: 16-07-1987

என்றும் சிரித்த முகத்துடனும், உள்ளமகிழ்வுடனும் வாழ்ந்து வந்து எம்மைப் பேணி சேவவயாற்றி இன்று ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டுமீளாத் துயில்கொள்ளும் எங்கள் குடும்பக் குலவிளக்கின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்:

தங்கள் பிரிவால் வாடும்: அன்புக்கணவன், மக்கள், மருமகன், பேத்தி, சகோதரிகள், உற்றார், உறவினர். (சி 0264)

## விற்பனைக்கு

கோழிஎரு விற்பனைக்குண்டு சிமாட்டி பாப்ஸ், ஸ்ரேசன் றோட், மயிலங்காடு, சுன்னாகம். [சி-0367]

எம்மிடம் புதிய இரும்புசுருக்குக் கேற் 10' X 8' ஒன்றும், [Avary அவரி தராசு 5 அந்தர் ஒன்றும் விற்பனைக்குண்டு. இந்திரா ஹாட்வயர், 131, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். [சி-0366)

ஜேமன் செப்பட் அல்ஸேசன் குட்டிகள் [ஒன்றரை மாதம்] விற்பனைக்குண்டு 249, பலாலிவீதி, கந்தர்மடம். யாழ்ப்பாணம் [சி-0376]

புதிய 6 அடி உயரம் 4 அடி அகலம் கொண்ட வேம்பு கதவு உடன் விற்பனைக்குண்டு. மற்றும் 2 [6 அடி 3 அடி] கதவுகளும் விற்பனைக்குண்டு M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். [சி-0379]

National Panasonic 3 in one Player, Box, கசற் றேடியோ உடன் விற்பனைக்குண்டு. புதிய நிலையில் உள்ளது 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். சென்பற்றிக் சந்தியருகில். [சி-0380

இம்மாதம் 23-ம் திகதி நடைபெறவிருக்கும் உதவி ஆசிரியர் போட்டிப்பரீட்சைக்குரிய வழிகாட்டி ''பொது அறிவும் பொது உளச்சார்பும்'' அஸ்ரன் வெளியீடு விலைரூபா 49/50 பூபாலசிங்கம்,ஸ்ரீலங்கா,ஸ்ரீசுப்பிரமணியம் ஆகிய புத்தக சாலைகளில் பெற்றுக்கொள்ளலாம். [சி-0357]

பொம்மனேரியன் - மிகவும் அழகான பூச்சி அகற்றப்பட்ட 6 கிழமை நாய்குட்டிகள் விற்பனைக்குண்டு. விபரம்: T. N. இரகுநாதன், 179, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.[ஈழமுரசு காரியாலயத்திற்கு அண்மையில்] [சி-0373]

வவனியா ஸ்ரீ முருகன் தியேட்டருக்கு அருகில் [2-ம் குறுக்குத் தெருவில்] எட்டு அறைகள் கொண்ட கட்டிடமும், ஐந்துபரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சாலை முகாமையாளர், இ. போ. ச., வவனியா அல்லது N. இராசரத்தினம், யாழ். பஸ்நிலைய O I. C., சிவன்கோயிலடி, சித்தன்கேணி. [சி-0355]

Nallur Farm Center பெருந்தொகையான தரமான முட்டையிடும் இனங்களான Prima Farm ''Lohmann'' Christombu Farm ''Golden Comets'' சிவப்பு வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவற்குஞ்சுகள், புறேயிலர் குஞ்சுகள் நியாயமான விலைக்கு ஒவ்வொரு வாரமும் பெற்றுக்கொள்ளலாம். C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர் (சி-0382)

பாவித்த வீட்டுத்தளபாடங்கள், அல்மாரி, கட்டில் மெத்தைகள், காரியாலய மேசைகள், கசற் றேடியோக்கள், Hot Plate, பித்தளை பூச்சாடி, குத்துவிளக்குகள், Show case, கண்ணாடி மேசை, Office மேசைகள், Vono Spring Twin Beds, கடை சோகேஸ், ஹோல் செற், மகாராஜா ஹோல் செற் மற்றும் கிளாஸ் வகைகள் மிகவும் மலிவுவிலையில் விற்பனைக்குண்டு. 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சென் பற்றிக் சந்தியருகில்] [சி-0378]

## விற்பனைக்கு

பலவித மேசைகள், Towel Rack, பிரம்பு ஹோல்செற், Vono கட்டில்கள், Amplifier, Typewriter, Kenwood Chef, மற்றும் பல விற்பனைக்குண்டு. பத்மநாதன்,பிறிமல்டி சேவிஸ், திருநெல்வேலி வடக்கு. [சி-0374]

## தேவை

கிளிநொச்சி K.D R R O. ஸ்தாபன வெளிக்கள ஊழியர் பதவிக்கு 25—40 வயதுக்கு இடைப்பட்டவருக்கு வெற்றிடங்கள் உண்டு. 25-8 87க்கு முன் தலைவர், K.D R.R O., கிளிநொச்சி என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். [சி-0362]

இறைச்சிக்கு கோழி தேவை. எவ்வகை இனங்களாயினும் பல விலைகளிலும் நேரில் வந்தும் பெற்றுக்கொள்ளப்படும். ஹோட்டல் பரடைஸ் 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி 0332)

யாழ். நகரில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றுக்கு முன் அனுபவம் உள்ள Room Boys/ Waiter தேவை. உடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. A 1998, C/o, ஈழநாடு, யாழ்ப்பாணம். (A 1998)

கார் டயர் ஒட்டுவேலைகள் செய்வதிலும் சயிக்கிள் வேலை செய்வதிலும் அனுபவம் உள்ளவர்கள் நேரில் வரவும். ஜெமினி டயர் வேர்க்ஸ், மானிப்பாய் ஆஸ்பத்திரிவீதி, மானிப்பாய். [சி 0350]

எமது ஸ்தாபனத்திற்கு பெண் லிகிதர், அனுபவமுள்ள அச்சுக்கோப்பாளர் உடன் தேவை. தொடர்பு: ஏசியன் அச்சகம், இல. 28, 3-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். [சி-0363

நெல்குற்றும், மா-மிளகாய் அரைக்கும் மில்லுக்கு வேலை அனுபவமுள்ள ஒருவர் உடனடியாகத்தேவை. இருப்பிட வசதி உண்டு. நேரில்வரவும். சாந்தி மில்,வட்டுக்கோட்டை. [சி-0375]

## வகுப்புக்கள்

மார்கழியில் நடைபெறும் 6-ம் ஆண்டுக்கான புலமைப் பரீட்சை வகுப்பு (5) பயிற்றப்பட்ட ஆசிரியரால் போதிக்கப்படவுளளது. ஆரம்பம் ஆவணி 20-ல். பிறிலியன் அக்கடமி, நெல்லியடி, கரவெட்டி. (சி-0256)

## திருஞானஸ்

பட்டையக் கணக்காளர், வருமானவரி ஆலோசகர்



19—08—87 புதன் மீண்டும் ஆரம்பமாகும்.

யாழ்.மத்திய பஸ்நிலையத்திற்கு வடக்கே.

கலாநிதி

வெ. திருஞானசம்பந்தர், (M.Com, Ph. D, F. C. M. A, F.C.C.A, A. C. I. S., A. C. A. F. B. I. M.

(சி 0386)

## சேவை

கோவில் மணிகள், தேர் மணிகள், குத்துவிளக்குகள், தூண்டாமணி விளக்குகள் மற்றும் கோவில்களுக்குத் தேவையான வார்ப்பு வேலைகள் செய்து கொடுக்கப்படும். சிங்கம் பித்தளைத் தொழிற்சாலை இல. 48, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் (ஈழநாடு முன்பாக) (சி-0175)

## சோதிடம்

எண்சோதிடம், கிரகசோதிடம், ஜனனக்குறிப்பு எழுத, கைரேகை பார்க்க, விவாகப் பொருத்தம், மனைப்பொருத்தம் ஆகியனவற்றிற்கு தொடர்புகொள்ளவும்: க. சி பொ. கஜேந்திரன், முன்னைநாள் மு மு. மார்க்கண்டு [எண்சோதிட கலாநிதி] அவர்களின் பிரதமசீடன், ஸ்ரான்லி வீதி, மார்க்கெட், யாழ்ப்பாணம். [சி-0361]

## தவறிவிட்டது

திறப்புக்கோர்வை, மேசைக் கத்தி, ரிபன் பொக்ஸ் மற்றும் சில்லறைச் சாமான்கள் அடங்கிய நீல நிற பிளாஸ்ரிக் பாக் 10-8-87 பி. பகல் 4 மணியளவில் கொட்டடி வீதியிலிருந்து பண்ணை வீதிவழியாக அல்லைப்பிட்டி சந்திக்குள் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து திறப்புக் கோர்வையாகுதல் திரு செந்தூரன் ரேடிங் கம்பனி, 315,கே கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி 0384)

## பச்சிலைப்பள்ளி பல நோ. கூ. சங்கம், பளை.

## 24ஸ்ரீ 8379 இலக்க மொறிஸ் லொறி

## பகிரங்க ஏல விற்பனை

பச்சிலைப்பள்ளி பல. நோ கூ. சங்கத்திற்குச் சொந்தமான 24ஸ்ரீ 8379 இலக்க மொறிஸ் லொறி 25-8-87 காலை 10 00 மணிக்கு பச்சிலைப்பள்ளி பல. நோ. கூ. சங்கத்தில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஏலத்தில் பங்குபற்றுவோர் 50/- ரூபாவை பங்குபற்றுவதற்கான அனுமதிககட்டணமாகவும், 1000/- ரூபாவை மீளளிக்கப்படும் வைப்புப்பணமாகவும் செலுத்தி ஏலத்தில் பங்குபற்றுவதற்கான உத்தரவுப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். அனுமதிக்கட்டணம் ரூபா 50/- மீளளிக்கப்படமாட்டாது.

வெற்றிபெற்ற விண்ணப்பதாரர் கேள்வித் தொகையின் 25% வீதத்தை ரொக்கமாக உடன் செலுத்துதல் வேண்டும். மிகுதி 75% வீதத்தை ஏழு நாட்களுக்குள் முற்றாகச் செலுத்திலொறியை எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். ஏல விற்பனை தொடர்பாக இயக்குநர் சபையின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

லொறியை 18 - 8 - 87, 19 - 8 - 87 ஆகிய இரு தினங்களில் அலுவலக நேரங்களில் சங்க அலுவலகத்தில் பார்வையிடலாம்.

மேலதிக விபரங்கட்கு சங்க பொதுமுகாமையாளர் அவர்களுடன் நேரில் தொடர்புகொள்ளவும்.

அ. வ. ஜோர்ஜ், தலைவர். பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. ச. பளை.

(சி 2032)

## சேவை

40 வருடம் அனுபவம்பெற்ற மூவீ அன்ட் ஸ்டில் கமரா சகலமும் எலக்ரோனிக் பிளாஸ்கன் சகலதும். போட்டோகிராப் உப உபகரணங்கள் திருத்துவதற்கு சிறந்த கலர்ப் படப்பிடிப்பிற்கும்: ரகு போட்டோ டெக்னிக் ஸ்தாபனத்தார், 187/6, கில்னர் லேன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [சி-0287]

நவீன / பழைய குளிர்சாதனப் பெட்டிகள் சீரானமுறையில் சீரமைக்கப்படும். மண்ணெண்ணை மொடல் மாற்றி சீரமைத்தல், ஸ்பிறே வர்ணம் அடித்தல் போன்ற வேலைகள், வாசிங் மெசின் பெல்லிங் குக்கர், பொலிசர், நவீன மின்சார குசினி பாவனை சாதனங்கள் திருப்திகரமான முறையில் திருத்திக் கொடுக்கப்படும். பென்குயின் ஏயார் கொன் என்ஜினியர்ஸ், A. B. சபாநாதன், 14,மணல் தறை லேன், கந்தர்மடம். (சி-0244)

## நன்றி நவிலல்

### கந்தையா அப்புத்துரை

(கொல்லங்கலட்டி) (இளைப்பாறிய லிகிதர், மாவட்டநீதிமன்றம், மல்லாகம்; இளைப்பாறிய முதலியார், மாவட்ட.நீதிமன்றம், யாழ்ப்பாணம்).

தோற்றம்: 06-06-1917

மறைவு: 24-06-1987

எம்மை எல்லாம் ஆருத் துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில்கொண்ட எங்கள் அன்புத் தந்தையின் ஈமச்சடங்கிலும்,அந்தியக்கிரியையிலும் பங்குபற்றி உதவியவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியும், நேரிலும் அனுதாபம்தெரிவித்தவர்களுக்கும் எங்கள் துயர் கலந்த நன்றியைத்தெரிவித்துக்கொள்கிறோம்.

மனைவி: கைலைநாயகி அம்பாள் (பேபி), மகன்: குமாரன் (குமரன் மாஸ்ரர்), மகள்: கௌரி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, பழைய மாணவி). (சி 0364)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



### தர்மலிங்கம் கீதகுமார்

அன்னை மடியில்: 29-12-1956

இறைவனடியில்: 02-06-1987

உமது அன்பில் திளைத்து பிரிவால் வாடுகிறோம். உமது தூயஆத்மசாந்திக்குப்பிரார்த்திக்கின்றோம்.

அம்மா, சகோதரர்கள், சகோதரி, மச்சாள்மார், மகன், உற்றார்,உறவினர், நண்பர்கள்.

75, ஸ்ரேசன் வீதி, வவுனியா. (சி 0320)

## 1947-ஆகஸ்ட் 14 நள்ளிரவில் நேரு ஆற்றிய சுதந்திர உரை

# இந்திய பாராளுமன்றத்தில் மீண்டும் ஒலித்தது!

புதுடில்லி, ஆக-14

இந்தியா சுதந்திரமடைந்த தினமான 1947ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14ம் திகதி நள்ளிரவு பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரம் பெற்றுக்கொண்டதும் வரலாற்றுப் புகழ் பெற்ற உரையை இந்தியாவின் முதலாவது பிரதமர் அமரர் பண்டிட் ஜவஹர்லால் நேருவின் குரல் நேற்று மீண்டும் ஒரு முறை இந்திய பாராளுமன்றத்தில் ஒலித்தது.

40 ஆண்டுகளுக்கு முன் அவ் உரை நிகழ்த்தப்பட்ட இந்திய பாராளுமன்றத்தின் மத்திய மண்டபத்திலிருந்தே இந்த உரை மீண்டும் ஒலித்தது.

இந்திய சுதந்திரத்தின் 40வது ஆண்டு நிறைவை ஒட்டி நேற்று இந்திய பாராளுமன்றத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் ஒலிபரப்பப்பட்ட அமரர் நேருவின் உரையை ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன் பிரதமர் ராஜீவ் காந்தி, அரசாங்க, எதிர்க்கட்சி எம். பிக்கள், அரசாங்க, எதிர்க்கட்சித் தலைவர்கள், முதலமைச்சர்கள், ஆளுநர்கள், விடுதலைப் போராட்ட வீரர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் ஆகியோர் செவிமடுத்தனர்.

அரும் பாடுபட்டுத் தாம் பெற்ற சுதந்திர இந்தியாவின் முதலாவது பிரதமரின் உரையை மெய்மறந்து கேட்ட விடுதலைப் போராட்ட வீரர்கள் தமது பழைய நினைவுகளை அசைபோட்டுக் கொண்டதாக சபை நிருபர்கள் தெரிவிக்கின்றனர்.

### பிரதமர் ஜனாதிபதி அழைப்பு

வறுமை, வன்முறை, அடக்குமுறை, பாகுபாடு ஆகியவற்றுக்கு எதிராக அயராது போர் நடத்தி அரும் பாடுபட்டுப் பெற்ற விடுதலையைப் பேணிப் பாதுகாத்துள்ள இந்தியாவை உருவாக்கும் பெருமுயற்சியில் சகல மக்களும் சேர்ந்து உழைக்கவேண்டுமென இந்திய ஜனாதிபதியும், பிரதமரும் இச்சிறப்புக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் வேண்டுகோள் விடுத்தனர்.

---

வரட்சி நிவாரணத்தை பார்வையிடுவதற்காக

## ராஜீவின் வெளிநாட்டு விஜயம் ஒத்திவைப்பு

புதுடில்லி, ஆக-14

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி இம்மாதம் 24ம் திகதி மேற்கொள்ளவிருந்த வெளிநாட்டுப் பயணத்தை ஒத்திவைத்துள்ளார்.

கடும் வரட்சியால் பாதிக்கப்பட்ட இந்தியாவின் பல பகுதிகளில் மேற்கொள்ளப்படும் வரட்சி நிவாரணப் பணிகளைத் தாமே நேரில பார்வையிடும் நோக்குடனேயே திரு. காந்தி தமது வெளிநாட்டுப் பயணத்தை ஒத்திவைத்துள்ளார் எனப் புதுடில்லியில் உள்ள அதிகாரியொருவர் கூறினார்.

திரு. காந்தி இம்மாதம் 24ம் திகதி முதல் 29ம் திகதிவரை மேற்கு ஜெர்மன், ஹங்கேரி, யூகோஸ்லாவியா நாடுகளில் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவிருந்தார்.

---

## வளைகுடா கண்ணிவெடிகளை ஈரானும் அகற்றும்

தெஹ்ரான், ஆக-14

வளைகுடாவில் கடற்கண்ணி வெடிகளை அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்போவதாக ஈரானும் அறிவித்துள்ளது.

குவைத் எண்ணெய்க் கப்பல்களை வளைகுடாவில் வைத்துத் தகர்ப்பதற்காக ஈரானே வளைகுடாவில் கண்ணிவெடிகளை வைத்துள்ளதாகக் குற்றம் சாட்டிய அமெரிக்கா, அக்கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளை மேற்கொள்வதோடு அப்பணிக்கு பிரிட்டிஷ், பிரான்ஸ் நாடுகளின் உதவிகளையும் கோரியதையடுத்து, முதலில் மறுத்த அந்நாடுகள் பின்னர் இணக்கம் தெரிவித்துள்ள வேளையில் ஈரானின் மேற்படி அறிவிப்பு வெளிவந்துள்ளது

இதேவேளையில் அமெரிக்காவின் அழைப்பையேற்று கண்ணிவெடிகளை அகற்றும் கலங்களை வளைகுடாவுக்கு அனுப்புவதற்கு பிரிட்டனும், பிரான்ஸும் மேற்கொண்டுள்ள முடிவை ஈரான் கண்டித்துள்ளது.

வளைகுடாவில் அமெரிக்காவே கண்ணிவெடிகளை வைத்துள்ளது என்றும் ஈரான் குற்றம் சாட்டியுள்ளது.

---


## வெளிவாரி பட்டப்படிப்புக்கள்

G. A. Q. கல்வியாண்டு 88/89 A/L பரீட்சையில் 3 பாடங்கள் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவுத் திகதி 04-09-1987. இதற்கான விண்ணப்பங்களையும், விபரங்களையும் நேரிலும் சுயவிலாசமிட்ட தபால் மூலமும் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான வகுப்புக்கள்

**ஆரம்பம் 05–09–1987**

விரிவுரையாளர்கள்

பொருளியல் — குமாரவேல்
தமிழ் — குழந்தை
இந்துநாகரிகம் — அருள்நங்கை
மெய்யியல் — வேல்சிவானந்தன்
புவியியல் — குணராசா
அரசியல் — குமார்

விபரங்கட்கு:

**நிர்வாகி,**
**உயர்கலைக் கல்லூரி,**
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(சி-0371)


---

## "ஒப்பந்தம் உருவாகும்போது விட்டுக்கொடுக்க வேண்டும்"

### அமிர்தலிங்கம் பேட்டி

(லண்டன்)

**"ஒப்பந்தம் ஒன்று உருவாகும் போது இரு தரப்பினருமே விட்டுக் கொடுக்க வேண்டும். ஒரு தரப்பினர் வெற்றி தமக்கே என்று எதிர் பார்க்க முடியாது. இதற்கேற்ப சில அம்சங்களில் நாங்களும் விட்டுக் கொடுக்க வேண்டி ஏற்பட்டது."**

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ அமிர்தலிங்கம் அண்மையில் கைச்சாத்தான இலங்கை- இந்திய ஒப்பந்தம் குறித்து பி பி ஸி நிருபர் திரு. பில்ஜோன்ஸ்சனுக்கு அளித்த பேட்டியொன்றில் கூறினர்.

பேட்டியின் விபரம்வருமாறு:

நிருபர்: தற்போது மேற்கொள்ளப்பட்ட சமாதான உடன்படிக்கை பற்றி தங்களுடைய கருத்து என்ன?

அமிர்: உடன்படிக்கை என்று வரும் போது இருதரப்பாருமே விட்டுக் கொடுக்க வேண்டும். ஒரு தரப்பினர் வெற்றி தமக்கே கிடைக்க வேண்டுமென எதிர்பார்க்க முடியாது. இதற்கமைய சில அம்சங்களில் நாங்கள் விட்டுக் கொடுக்க வேண்டி இருந்தது. பொதுவாகப் பார்த்தால் இது ஒரு திருப்திகரமான உடன்படிக்கை.

நிருபர்: தமிழர் விடுதலைக் கூட்டணி மக்களிடையே முன்பிருந்த செல்வாக்கை மீண்டும் பெற முயலுமா?

அமிர்: தமிழ் இயக்கங்களிடையே மோதல் ஏற்படுவதைத் தவிர்த்து ஒற்றுமைப் படுத்த வேண்டுமென்பதே எமது முக்கிய நோக்கம். இதற்காக போராளிகள் அமைப்பையும் தமிழர் விடுதலைக் கூட்டணியையும் கொண்ட புதிய அமைப்பொன்றை நாம் உருவாக்க வேண்டும்.

நிருபர்: தமிழர் விடுதலைக் கூட்டணியின் கடந்த காலச் செயற்பாடுகள் என்ன?

அமிர்: தமிழ்ப்போராளிகள் ஆயுதம் ஏந்தி தமிழ் ஈழம் கோரி போராட்டம் நடத்தியதைத் தொடர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணி ஒடுக்கப்பட்ட நிலைக்குத் தள்ளப் பட்டது.

1977ம்ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழ்ப் பகுதிகளில் பெரும்பான்மை ஸ்தானங்களைக் கைப்பற்றி பாராளுமன்றத்தில் முக்கிய எதிர்க் கட்சியாக விளங்கிய நாம் பிரிவினை வாதத்தைக் கைவிட மறுத்ததால் பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றப்பட்டு கூட்டணித் தலைவர்கள் பலர் சென்னையில் நாடு கடந்த நிலையில் வாழவேண்டியநிலை ஏற்பட்டது.

நிருபர்: தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்வரும் தேர்தலில் ஒரு குழுவுடன் இணைந்து ஏனைய குழுக்களை எதிர்த்துப் போட்டியிடுமா?

அமிர்: பொதுவாக அனைத்து அமைப்புகளும் தங்கள சொந்த நலனைக் கருதாது மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு செயல்படுவது நல்லதும் விவேகமானதுமாகும் கூட்டணி எந்தவொரு குழுவுடனும் இணைந்து ஏனைய குழுக்களை எதிர்த்துப் போட்டி இடாது.

நிருபர்: தமிழ்ப் போராளிகளுடன் சேர்ந்து ஒற்றுமையாக செயற்படுவது சாத்தியமென உண்மையிலேயே நீங்கள் நம்புகிறீர்களா?

அமிர்: தமிழ்ப்போராளிகள் குண்டுகளிற்குப் பதிலாக வார்த்தைகளைப் பயன்படுத்தும் போது மாறியுள்ள சூழ்நிலைக்கேற்ப செயல்படுவார்கள் என நம்புகிறேன்

தொகுப்பு: கணேசராசா.

---

## வருடாந்த மஹோற்சவம்

[யாழ்ப்பாணம்]

கொக்குவில் மாத்தனைக் கந்தசாமி கோவில் மஹோற்சவ விஞ்ஞாபனம் இன்று காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது

தொடர்ந்து பத்து நாட்கள் திருவிழா நடைபெற்று 25ம் திகதி செவ்வாய்க்கிழமை இரதோற்சவமும் 26ம் திகதி தீர்த்தோற்சவத்துடனும் முடிவடையும்.

---

## சேர்ச்சில், லிங்கனின் கடிதங்களை விற்க முனைந்தவர் கைது!

வாஷிங்டன், ஆகஸ்ட் 14

அமெரிக்க முன்னாள் அதிபர் காலஞ்சென்ற ஏபிரகாம் லிங்கன், பிரிட்டிஷ் முன்னாள் பிரதமர் காலஞ்சென்ற வின்சன்ட் சேர்ச்சில் ஆகியோரால் எழுதப்பட்ட கடிதங்களை விற்பனை செய்ய முயன்ற ஒருநபரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

அமெரிக்க காங்கிரஸில் உள்ள நூல் நிலையத்திலிருந்து திருடப்பட்டதாகக் கருதப்படும் இக்கடிதங்களையும் மற்றும் சில ஆயுதங்களையும் புத்தக கடை ஒன்றில் விற்பதற்காகக் கொண்டு சென்றபோதே இந்நபர் கைதுசெய்யப்பட்டார்.

குறிப்பிட்ட கடிதங்கள் அண்மையில் காங்கிரஸ் நூல் நிலையத்திலிருந்து திருட்டுப் போயுள்ளதாக நூல் நிலைய அதிகாரி ஒருவர் கூறினர்.

---

31–ம் திகதிக்கு முன்னர்

## 3-ம் தவணைக்கு பாடசாலை ஆரம்பிக்க அனுமதி

(யாழ்ப்பாணம்)

"யாழ். மாவட்டத்தில் க. பொ. த. உயர்தரப் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படாத பாடசாலைகள் 31ம் திகதி மூன்றாம் தவணை ஆரம்பிக்க முன்னரே பாடசாலையை ஆரம்பிக்க விரும்பினால். அதற்கு அனுமதி வழங்கப்படும் என்று கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் சுற்றறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

(5ம் பக்கம் பார்க்க)

---

## மின் விநியோகம் சீராக்க ஏற்பாடு

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை, மாவிட்டபுரம் பகுதிகளில் சீர்குலைந்துள்ள மின் விநியோகத்தைச் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மக்கள் அப்பகுதிக்கு வீடுகளில் வசிப்பதற்குச்செல்கின்ற போதும் மின்விநியோகம் சீரற்றுக் கம்பிகள் அறுந்துகிடப்பதால் இரவு நேரங்களில் அங்கு தங்க அஞ்சுகிறார்கள்.

உடனடியாக மின் விநியோகத்தைச் சீர்செய்ய காங்கேசன்துறை உப அலுவலக மின்சாரப் பகுதி ஊழியர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

[இ]

### மணிவாக்கு

இலட்சியம் வெகுதூரத்தில் இருக்கலாம்; ஆனால் அதற்குச் செலலும் அடுத்தபடி வெகு அருகே இருக்கிறது.

— அநாமி

## நமது நோக்கு

# பிதா சிங்கராயரின் விடுதலை

ஏறத்தாழ நான்கரை ஆண்டுகள் நீதிக்காகப் போராடியபின் இரு தினங்களுக்குமுன்னர் பிதா ஆபரணம் சிங்கராயர் விடுதலை பெற்றுத் திரும்பியுள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு உள ரீதியாகவும், உடல் ரீதியாகவும் சொல்லொணா சித்திரவதைகளுக்குள்ளாகியபோதிலும் இறைவன்பேரில் வைத்த நம்பிக்கையினால் உண்மை என்றுமே வெளிப்பட்டேயாகும் என்ற தமது உறுதியில் தளராமல் நின்றவர் பிதா சிங்கராயர்.

பிலாத்துவின் முன்னால் யேசுபெருமான் நிறுத்தப்பட்டபோது தமக்கு நீதி வழங்கப்படும் என்று அவர் எதிர்பா[illegible]திடவில்லை [illegible]காக வாதிட்டு நறகவுமில்லை

''இவர் குற்றமற்றவர்'' என்று உணர்ந்த நிலையிலும் அரசன் நீதியாக செயல்பட முடியாதநிலைக்குத் தள்ளப்பட்டான். அதனால் அவன் தனது கைகளைக்கழுவி தனக்குள்ள பொறுப்பையும் கைவிட்டான்.

பயங்கரவாதச் சட்டமானது ஆயுதப்படையினர் சந்தேகத்தின்மீது தாம் கைதுசெய்பவர்களை பலவந்தம் செய்து பெற்றுக்கொள்ளும் வாக்குமூலத்தின் மீது குற்றவாளிகளாகத் தீர்ப்பு வழங்கும் படியாக நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்துவதாக அமைந்துள்ளது.

இது நாட்டின் சாதாரண சட்டங்களுக்கு முற்றும் முழுதாக மாறானது. எனவே அதன்முன்னால் நீதியை எங்ஙனம் எதிர்பார்க்கமுடியும்?

சட்டத்தின்படியே நீதிமன்றம் செயல்படவேண்டியிருக்கும்போது - நீதியற்ற சட்டத்தின் முன் நீதி கிடைக்க வழியில்லை.

என்றாலும் நீதிமன்றத்தின் தீர்ப்பை பிதா சிங்கராயர்எதிர்கொள்ளத் தயாராய் இருந்தார்.

அரசின் தேவைக்கு ஏற்ப உருவாக்கப்பட்ட சட்டங்களான போதிலும் நீதிமன்ற விசாரணைக்கு ஆளாவதின் மூலம் தமது நிலைப்பாட்டின் நியாயத்தை உலகுக்கு எடுத்துக்காட்ட அவர் துணிந்துநின்றார். அதனால் தான் மட்டக்களப்பு சிறையிலிருந்து தப்பிச்செல்ல வாய்ப்பு இருந்தும் அதற்கு அவர் உடன்படவில்லை.

வழக்கு இறுகிக்கட்டத்தை நெருங்கியிருந்த வேளையில் பிதா சிங்கராயரை சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

தமிழருக்கெதிரான சகல ஒடுக்கு முறைகளையும் எதிர்த்து இலட்சோப லட்சம் மக்கள் சிறைக்கு வெளியிலிருந்து போராடிக்கொண்டிருந்த வேளையில், சிறைக்குள்ளிருந்தே நீதிக்கு போராடியவர் அவர்.

அவரது விடுதலை நீதிக்காகப் போராடுபவர்களுக்குக் கிடைத்த விடுதலையாகவே கருதப்படவேண்டும்.

# பழம்பெரும்நாடு

''பாரதநாடு பழம்பெரும் நாடு, நீர் அதன் புதல்வர் - இந்நினைவகற்றாதீர்'' என்று பாடினான் மகாகவி பாரதி.

பழமையின் பச்சோந்தித்தனத்தில் சற்றும் பற்றுதலில்லாத பாரதியே பழம்பெரும் நாடு என்று பாடுகிறான் என்றால் அதன் பெருமை எத்தகையது என்பதை தன் நாட்டவர் உய்த்து உணர்ந்து மகிழவேண்டும், பெருமை கொள்ள வேண்டும் என்பதே அவன் நோக்கம்.

உலக சமயங்களை, தத்துவ சிந்தனைகளை, இலக்கியமரபுகளை, இலக்கணங்களைமட்டுமல்ல, நாகரிக உலகம் இன்றும் கூட வியந்து பாராட்டும் கலை அற்புதங்களை, கலாசாரவடிவங்களை, அரசியல் சித்தாத்தங்களையெல்லாம் தன்னகத்தே கொண்டு மிளிர்வது பாரதம். அங்கே இல்லாத வளமில்லை, இல்லாத சமயம் இல்லை, இல்லாத கலை இல்லை, இல்லாத எதுவுமே இல்லையென்று கூறும்படியான அமைப்பைக்கொண்டது அப்பெரும்நாடு.

இந்நூற்றாண்டின் நடுப்பகுதியிலே பாரதம் நிகழ்த்திய உலக அற்புதங்களில் இன்னும் ஒன்றுதான் உலக வல்லரசுகளில் ஒன்றான பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை ஆயுதம் ஏந்தாது தனது ஆத்மசக்தியின் வலிமையால் போராடி தனது எல்லையை விட்டே துரத்தியதாகும்.

தொழிலைவிட்டு, சுகத்தை விட்டு, ஏன் உடையையும் கூடத் தூக்கிஎறிந்துவிட்டு வெறும் கௌபீனத்துடன் மக்கள் மத்தியில் புகுந்த 'காந்தி' என்ற ஒரு மனிதர் முப்பதுகோடி மக்களை தமக்குப் பின்னால் வரிசையிட்டு நிற்கச்செய்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை கதிகலங்கச் செய்தார் என்றால் அது உலக அற்புதங்களில் ஒன்று அல்லவா! அந்தஅற்புதத்தின் வாயிலாககிடைக்கப்பெற்ற அறுவடையின் 40வது விழாவினை இன்று பாரதத்தின் 70 கோடி மக்களும் பெருமையுடன் கொண்டாடுகிறார்கள்.

அந்தப்பெருமையில் எமக்குப் பங்கில்லாவிடினும் பாராட்டி வாழ்த்துக்கூறுவதில்மகிழ்ச்சியடைவோமாக

# சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

[சுண்டுக்குளி]

யாழ். கச்சேரிப் பகுதியில் மீண்டும் சைக்கிள் திருட்டுஅதிகரித்துள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் யாழ். பழைய செயலகத்துக்கு முன்இருந்து மொழி பெயர்ப்பாளராக பணி புரியும் ஒருவரது சைக்கிள் களவாடப்பட்டது.

இதே போல முன்பு பலதடவைகள் இவ்விடத்தில் சைக்கிளகள்களவு போனது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவின் 40-வது சுதந்திரதினம்

இந்தியா என்பது உபகண்டததைக் குறித்து நிற்பதாகும். ஆனால் இந்திய உபகண்டத்தில் நிலவிய ஆங்கிலேய ஏகாதிபத்திய ஆட்சி நீங்கி 1947 ஆகஸ்ட் 15ந் திகதி நள்ளிரவு விடுதலை கிடைத்ததும் இந்தியா, பாகிஸ்தான் என்னும் இரு தன்னிறைமை கொண்ட அரசுகள் உபகண்டத்தில் தோன்றின. பின் 1971 ஏப்பிரலில் மூன்றாவது தன்னிறைமை கொண்ட பங்களாதேஷ் நாடு மலர்ந்தது. இன்று இந்திய உப கண்டத்தில் இந்தியா, பாகிஸ்தான் பங்காதேஷ் என்னும் மூன்று சுதந்திர நாடுகள் உள்ளன.

சுதந்திர இந்தியாவின் இன்றைய நிலைமையினை நோக்கின்; அது உலகின் ஏழாவது பெரிய தேசம். உலகின் எட்டாவது வல்லரசு. வளர்முக நாடுகளில் முதன்மையான அரசு கூட்டுச்சேரா நாடுகள் அமைப்பின் ஸ்தாபகர்களில் தலைமையானது. 3 27 மில்லியன் சதுர கிலோ மீட்டர் பரப்புடைய நாடு உலகின்பரப்பில் இந்திய நாட்டின் பங்கு 2. 4 சதவீதம். உலகின் சனத்தொகையில் 2 வது இடத்தை வகிக்கிறது. தற்போது 78 கோடி மக்களைக் கொண்டநாடு. பல்லினம், மொழி, மதம் பண்பாடு, கலாசார வாழ்க்கை முறைகளைக் கொண்ட இந்தியா அதன் சுதந்திரப் போரினால்'இந்தியர் நாம்' என்ற ஒற்றுமைப்பட்ட நாடாகவும் விளங்குகின்றது. அதன் கடந்த 40 ஆண்டுகால சுதந்திர வாழ்வில் சுயபலத்தில் தனது வளத்தை, உற்பத்தித்திறனை, பாதுகாப்பினை வளர்த்து வரும் நாடு ஆயினும் இன, மத, மொழி ரீதியான கலவரங்கள், சமுதாய வறுமைத் துயரங்கள், மாநிலங்களின் சிக்கல்கள், இந்து-முஸ்லிம் பிணக்குகள், சீக்கிய வன்முறைகள் என்பனவுக்கும் குறைவில்லை. இருந்தும் 'இந்தியர் நாம்' என்ற உணர்வுக்குப் பங்கமேற்படவில்லை. இதனை இந்தியா தனது சுதந்திர வாழ்வில் கண்டுள்ள பாகிஸ்தானுடனான எல்லைப் புறப் போர்கள் இரண்டிலும் மக்கள் சீனத்துடனான எல்லைப்புறப்போரிலும் நன்கு நிலை நிறுத்தியுள்ளது.

இந்தியச் சுதந்திரப் போர் உலக வரலாற்றில் ஒரு திருப்புமுனை மட்டுமல்ல ஆபிரிக்க, ஆசிய, மத்திய அமெரிக்கப் பிராந்தியங்களின் சுதந்திர நாடுகளின் மலர்வுக்கு முன்னோடியும் ஆகும். இந்தியச் சுதந்திரத்தினைத் தொடர்ந்து உலகில், குறிப்பாக ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் புதிய சுதந்திர நாடுகள் தொகை அதிகரித்தது. இந்தியா தனது 40 ஆண்டுகால சுதந்திர வாழ்வில் மூன்றாம் உலக நாடுகளின் சுதந்திரத்திற்கு உத்தரவாதம் அளிக்கின்றது. அடிமைத்துயரிலும் அடக்கி ஒடுக்கப்படும் அவலங்களிலும் உழலும்தேசிய இனங்களின் விடுதலைக்கு உற்றதோர் துணைவனாக நின்று செயல்படுகின்றது. இதனை தென்னாபிரிக்க விடுதலை அமைப்பான 'சுவாப்போ', பலஸ்தீன விடுதலை அமைப்பான 'பிஎல்ஓ' சுதந்திர பங்களாதேஷ், இலங்கைத் தமிழர்களாகிய எமது விடிவிலும் அளித்துள்ள அளித்து வரும் ஆக்கபூர்வமான பங்களிப்புக்கள் நன்கு தெளிவு படுத்துகின்றன

இன்று இந்தியா வியத்தகு நாடாக உலக அரங்கில் நிலைத்திருப்பதற்கு அதன் வெளியுறவுக்கொள்கையின் உறுதிப்பாடும் இங்கு கவனிக்கத்தக்கதாகும். தெற்காசியப் பிராந்தியத்திலும் இந்து மாகடற் பகுதியிலும் தங்களை நிலைநிறுத்த-இராணுவ-பொருளாதார ரீதியில் செயற்படும் பாகிஸ்தான், மக்கள்சீனம் இந்தியாவின் நிலப்பரப்போடு பிணைந்த அயல்நாடுகளாகும். இவை இரண்டும் இந்தியாவுடனான உறவுகளில் நம்பிக்கைக்குரிய முறையில் செயல்படவில்லை. அருணாசல பிரதேசம், அயல்நாடான நேபாளம் ஊடாக மக்கள் சீனத்தின் ஊடுருவல்களும், ஜம்மு-காஷ்மீர், பஞ்சாப் இந்திய மாநிலங்கள் ஊடாகப் பாகிஸ்தானின் ஊடுருவல்களும் இந்தியாவின் தேசிய நலனகளுக்கும்பெரும் சவால்களே.

இந்தியாவின் விடுதலைப் போரினை அஹிம்சை,ஒத்துழையாமை, சுதேசிய இயக்கம் ஆகிய சாத்வீக வழியில் செயற்படுத்தி உலக வரலாற்றில் ஆயுத பலத்தினை ஆத்ம பலத்தினால் தோற்கடித்தவர் காந்தி அடிகள். கோகலேயினால் முன் எடுக்கப்பட்ட இந்திய விடுதலைப் போராட்டம் காந்தியடிகளின் தலைமையில் நிறைவுற்றது. புதுமைபெற்றது இச் சுதந்திரப் போராட்டத்தில் களம்கண்ட தியாகிகள் பலர். அவர்களில் சுபாஷ் சந்திர போஸ் ஆயுதப்போராட்டத்தை முன்னெடுத்து இந்திய விடுதலைக்குத் தம்மை ஆகுதியாக்கினார். சுபாஷின் வீரம் செறிந்த போராட்ட வாழ்வும் நினைவுக்குரியதே. சுதந்திர இந்தியாவின் இந்திய-பாகிஸ்தான் பிரிவினை காந்தியடிகளை கவலையுறவைத்தது. ஆயினும் அதனை அவர் ஏற்காவிட்டாலும் இசைவு தெரிவித்தார். இதனைப் பொறுக்காத இந்துத் தீவிரவாதி கோட்ஸே, காந்தியடிகளை பலி எடுத்தான்

ஜவகர்லால்நேருவின் தலைமையில் வளர்ந்த இந்தியா அவரைத் தொடர்ந்து லால் பகதூர் சாஸ்திரி, இந்திரா காந்தி, மொராஜி தேசாய், இன்று ராஜீவ் காந்தி ஆகியோரால் வளாத்தெடுக்கப்படுகின்றது. உலகில் ஏகாதிபத்தியவாதிகளின் அடிமை ஆட்சியின் இருளுக்கிடையே சுதந்திர ஒளிப்பிழம்பாகத் தோன்றியசுதந்திர இந்தியா40ஆண்டு காலமாக எத்தனை இன்னல்கள்-எல்லைப் போர்கள், கலவரங்கள், அச்சுறுத்தல்கள் மத்தியிலும் முன்னேற்றம் காண்கின்றது சுதந்திர இந்தியாவை உருவாக்கிய பெருந்தியாகிகளுக்கும் அதனை வளர்த்தெடுக்கும் தலைவர்களும் என்றும் உலகினில் நிலைத்தபுகழ்பெறும் பண்புடையோரே.

க. அருளானந்தன்

### சமூக மனச்சான்று

எம்மிற் பலர் பொதுப் பணி எதிலும் பார்வையாளர்களாகவே இருக்க விரும்புகின்றனர். நாடு முன்னேறுவதானால் சமூகம் விழிப்படைய வேண்டும். இதற்குரிய நடவடிக்கைகளைச் சிலரிடம் ஒப்படைத்து அவற்றின் பயனைக் காத்திருப்பது சுதந்திர வாழ்வுக்கு சிறப்பளிக்காது. கல்வியில் முன்னேறத் துடிக்கும் எமது மக்கள் பொது விடயங்களில் உயிர்த்துடிப்புடன் பங்குபற்ற முன்வராவிட்டால் ஆட்சியின் குறைகள் அதிகரிக்கும்.

— க. சி. தங்கராசா

## மக்கள் கருத்து

### பளைப்பகுதிக்கு நிவாரணம் கிடைக்குமா?

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு யாழ். குடாநாட்டுக்குள்ளும் கிளிநொச்சி மாவட்டத்துக்குள்ளும் அடங்கும் ஒரு பகுதியாகும் இப்பகுதி மக்களுக்கு அனர்த்தங்கள் அத்தனையும் கிடைக்கும். ஆனால் ஆதரவோ, நிவாரணமோ ஒன்றும் கிடையாது. கிளிநொச்சி மாவட்டத்திற்கு ஊரடங்குச் சட்டம் என்றால் பளைப்பகுதிக்கும் ஊரடங்குச் சட்டம். யாழ். குடாநாட்டிற்கு ஊரடங்குச் சட்டம் என்றாலும் பளைப்பகுதியும் அதற்குள் அடங்கும். கிளிநொசசிக்கு நிவாரண உதவி என்றால் அது கிளிநொச்சிக்குத் தான் கிடைக்கும். பளை உ. அ. அதிபர் பிரிவுக்கு கிடையாது. யாழ் குடாநாட்டு மக்களுக்கு நிவாரண உதவி என்றால் யாழ், மாவட்டம் அதாவது எழுதுமட்டுவாள் மட்டும்தான் அவ் உதவி கிடைக்கும். பளைக்குக் கிடையாது. ஏன் இந்தப் பாரபட்சம்.

யாழ் குடாநாட்டு மக்களுக்கு நிவாரண நிதி அரசாங்கத்தால் வழங்கப்படும் என்று பத்திரிகை வாயிலாக அறிந்தோம் ஆனால் இதுவரை இந் நிவாரண உதவி இப்பகுதி மக்களுக்கு வழங்கப்படவில்லை. அரசாங்கத்தின் பொருளாதாரத் தடை, எரிபொருள் தடை போன்ற எல்லாவற்றாலும் இப்பகுதியில் இருக்கும் விவசாயிகள், தொழிலாளர்கள், கடற்றொழிலாளர்கள் பாதிப்படைந்தது இப்பகுதியிலுள்ளவர்களுக்குத் தெரியாதா? அல்லது பளை உ. அ. அதிபர் தனி மாவட்டம் என்று கருதுகின்

(5ம் பக்கம் பார்க்க)

# மறைபுகழ் நல்லைக்கந்தா!

சிறைதனி லிருந்து வாடிச்
சிந்தைநொந் தலறிச் சோர்ந்த
கறையிலாக் கீரன் றன்னைக்
கருணையால் மீட்டோய்! துங்கப்
பிறையணி பரம னார்தம்
பிரியநற் சுதனே! ஆதி
மறைபுகழ் நல்லைக் கந்தா!
வந்தெமக் கருள்செய் வாயே!

— கவியரசு வெண்பாமணி முருகசூரியன்

(இன்று நல்லைக் கந்தன் 16ம் திருவிழா)

### வடக்கு, கிழக்கில் வீடிழந்த—

# 2,500 குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள்

## நோர்வே செஞ்சிலுவைச் சங்க திட்டம்

ஒஸ்லோ - ஆக 14

இலங்கையில் வடக்கு, கிழக்கில் வீடுகளை இழந்துள்ள மக்களுக்கு தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுக்கும் திட்டமொன்றை நோர்வே செஞ்சிலுவைச்சங்கம் அமுல் படுத்தவுள்ளது. இதற்காக இச்சங்கத்தின் உயர்மட்டக்குழுவொன்று கொழும்பு சென்றுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 2500 குடும்பங்கள் நன்மையடையவுள்ளதாகவும் அடுத்தவாரம் முதல் இத்திட்டம் செயற்படுத்த ஆரம்பிக்கப்படும் என்றும் சங்கபிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்

முதற்கட்டமாக வவனியா, மன்னார், திருமலை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு அம்பாறை ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்திற்காக 87 லட்ச ரூபாய் செலவளிக்கப்படவுள்ளது.

இதேவேளை இப்பகுதி மக்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுக்கும் திட்டமொன்றும் இவ்வாண்டின் இறுதிப்பகுதியில் ஆரம்பிக்கப்படலாமென செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஊ)

### பளைப்பகுதிக்கு

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ரூர்களா? அவசர அவசரமாக நிவாரண நிதி [உதவி]க்கான விண்ணப்பப் படிவங்கள் மக்களிடம் கொடுத்து பூர்த்தியாக்கப்பட்டு வாங்கப்பட்டன. ஆனால் நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை.

பளைப்பகுதிக்கு ஒரு பிரஜைகள்குழு இருக்கிறது இதுவரையில் என்ன நடவடிக்கை எடுத்தது? பொம்பர் தாக்குதல், ஹெலியிலிருந்து ஷெல் அடி என்பவற்றால் எத்தனை உயிர்கள் பறிக்கப்பட்டன. எத்தனை பேருடைய உடமைகளுக்குச் சேதம் ஏற்பட்டது? இயக்கச்சி கோவில்வயல் பகுதியில் ராணுவ அட்டூழியத்தால் எத்தனை பேரின் உடமைகள் தீக்கிரையாக்கப்பட்டன, வீடுகள் தகர்க்கப்பட்டன, 1985ம் ஆண்டு இப்பகுதியில் சிறை பிடித்துச்சென்ற இளைஞர்களை விடுவிக்கஇப்பிரஜைகள் குழு நடவடிக்கை எடுத்ததா? இனி மேலாவது இப்பிரஜைகள்குழு செயலில் இறங்குமா?

இலங்கை அரசாங்கம் வழங்கிய நிவாரண உதவியும் கிடையாது. இந்திய அரசாங்கம் வழங்கிய நிவாரண உதவியும் கிடையாது. இதை இப்பகுதி மக்கள் யாருக்குச் சொல்வது? சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்நிவாரண உதவிபற்றிய உண்மைநிலையை இப்பகுதிமக்களுக்கு அறியத் தருவார்களா?

கே. கே. பிள்ளை,
பளை.


### விளம்பரம்

1987-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7-30 மணி முதல் பிற்பகல் 4-00 மணி வரை அவசர திருத்த நிர்மாண வேலைகளுக்காக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் (ஆனையிறவு, பரந்தன், ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, மாங்குளம், துணுக்காய் உட்பட) மின்விநியோகம் தடைப்படும் என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

மின் பொறியியலாளர்.

கிளிநொச்சி பிரதேச-
அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
மாங்குளம்.

(ஏ 2038)


## விரைவில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம்

பாரிஸ், ஆக. 14

இலங்கையின் புனர்நிர்மான வேலைகளுக்குத் தேவைப்படும் நிதியைத்திரட்டுமுகமாக உதவி வழங்கும் நாடுகளின் கூட்டமொன்றை விரைவில் கூட்ட உலகவங்கி நடவடிக்கைகளை எடுத்து வருகிறது

உலகவங்கியின் பேச்சாளர் ஒருவர் செய்தியாளர்களுக்குத் தகவல் தருகையில் இலங்கையின் அபிவிருத்தி, புனரமைப்பு புனர்நிர்மான வேலைகளுக்குத் தேவைப்படும் நிதி பொருளாதார உதவிகள் பற்றி உலகவங்கியின் நிபுணர் குழுவொன்று மதிப்பீடு செய்து வருவதாகத் தெரிவித்தார்

இலங்கையில் சமாதானம் திரும்பியபின் இடம்பெறவுள்ள புனர் நிர்மானவேலைகளை இணைக்கும் அமைப்பாக உலகவங்கி விளங்குமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்

இதேவேளை இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளுடன் உலகவங்கி ஏற்கனவே தொடர்பு கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஊ)

### உதைபந்தாட்ட மத்தியஸ்தர் வகுப்புகள்

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தாரால் உதைபந்தாட்ட மத்தியஸ்தக தரம் மூன்றுக்குரிய பரீட்சை இம்மாதம் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படவுள்ளது.

இப்பரீட்சையில் தோற்றி மத்தியஸ்தராக வரவிரும்புவோருக்கு முன்னோடி வகுப்புகள் இன்று 15ம்திகதியும் நாளை 16ம் திகதியும் 47, கல்லூரிவீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வகுப்புக்களை அகில இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க விரிவுரையாளர் குழு உறுப்பினரும், யாழ்ப்பாணம்உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவருமாகிய இ. கனகலிங்கம், யாழ்ப்பாண உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க விரிவுரையாளர் குழு உறுப்பினராகிய வி. குணரத்தினம் ஆகியோர் நடாத்துவார்கள்.

### 31-ம் திகதிக்கு

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி 2ம் தவணை முடிவடையும்போது 119 நாட்களும் இவ்வாண்டு முடிவடையும்போது 183 நாட்களும் பாடசாலை கட்டாயமாக நடாத்தப்படவேண்டும். அதற்கமைய கடந்த இரு தவணைகளிலும் இழந்த பாடசாலை நாட்களை ஈடுசெய்யும் பொருட்டே இவ்வறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர்கள் பதில் பாடசாலை நடாத்த உத்தேசிக்கும் தினங்களை தேர்வு செய்து தங்கள் பகுதி கல்வி அதிகாரி அல்லது கொத்தணி அதிபரூடாக கல்விப்பணிப்பாளருக்கு அனுப்புமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (சி)

### இந்திய தளபதி

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மேஜர் ஜெனரல் ஹர்கிரத்சிங், கடற்படைக் கமாண்டர் சுபாஷ்தார், பிரிகேடியர் ஜரி சில்வா, உட்பட பல சிரேஷ்ட இந்திய பாதுகாப்பு அதிகாரிகள் வரவேற்றனர். (ஊ)

### கோட்டை மிதிவெடி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிகிச்சைப்பிரிவில் மரணமானார்.

இவரது மரணவிசாரணையை யாழ். நீதிபதி க. கதிரவேற்பிள்ளை மேற்கொண்டார்

பிரேதபரிசோதனையை டாக்டர் செல்வி கனகரட்ணத்தின் அனுமதியுடன் டாக்டர் ஈஸ்வரராஜ் மேற்கொண்டார்.

இந்திய இராணுவ டாக்டர் லெப்டினன்ட் கேர்ணல் திலக்கும் உடனிருந்தார்

மேலும் இவ்விபத்தில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் சிப்பாய் தயாளனின் நிலையும் கவலைக்கிடமாகவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோட்டை மிதிவெடி விபத்தில் மேஜர் திலீப்சிங், முகுந்தராவ் என்ற இரு இந்திய இராணுவ வீரர்கள்ஏற்கனவே மரணமானது தெரிந்ததே. (கு)


## எமது நேற்றைய புதிய வெளியீடு

இளவரசன் ★ சந்தியா ★ செந்தில்

"ரேகா"

## இன்றைய வெளியீடு

பானுச்சந்தர் ★ சசிகலா ★ சிலுக்கு
(இருவேடம்)

"கண்மணி மின் மினி"

## குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டுவீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665, (ஏ 2036


### இடைக்கால...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கைகளை நேரில் அவதானித்து வரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் திரு. மாத்தயா அனுப்பிவைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் இப்பத்திரிகையாளர் மகாநாடு நடாத்தப்பட்டது.

இம்மாநாட்டில் திரு. திலீபன் மேலும் தெரிவித்தாவது:

கடந்த 11ம் திகதி நிலாவெளி இராணுவத்தினர் அங்கு ஏற்றப்பட்டிருந்த புலிக்கொடிகளையும் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளையும் கிழித்து அங்குள்ள தமிழ்மக்களின் வாய்க்குள் அவற்றைத் திணித்துச் சாப்பிடும்படி கூறி மிருகத்தனமாகத் தாக்கியுள்ளனர்.

அதேதினம் திருமலையில் சிறிமாபுரத்தில் இருந்து சாம்பல்தீவுக்கு அரிசி, மா, சீனி போன்ற உணவுப்பொருள்களுடன் சென்றுகொண்டிருந்த சிறி என்னும் அப்பாவித் தமிழ்ப் பொதுமகன் ஒருவர் ஊர்காவல் படையினரால் மிருகத்தனமாகத் தாக்கபட்டு அவரது உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கிறது.

### திட்டமிட்ட சிங்கள குடியேற்றம்

"இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பின் கிழக்கிலங்கையில் ஒப்பந்தத்திற்கு மாறாகத் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தையும் அமுல்படுத்தி வருகின்றனர்"

பன்குளம், இறக்கற்கண்டி, புல்மோட்டை, கலப்பையன் ஆறு, நிலாவெளி, சுமத்திரா 2-ம் கொலனி, நீலப்பளை, அலைஒழுவல், தேவிநுவர, தெஹிவத்த, மகிந்தபுரம் ஆகிய தமிழ்ப் பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றம் நடைபெற்றுவருகிறது.

### கிழக்கில் 116 முகாம்கள்

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பின்னும் தற்போது 116 சிறிலங்கா இராணுவ முகாம்கள் இருந்துவருகின்றன, அம்பாறையில் 21 முகாம்கள், திருமலையில் 25 முகாம்கள், மூதூரில் 14 முகாம்கள், தம்பலகாமத்தில் 32 முகாம்கள், மட்டக்களப்பில் 24 முகாம்கள் இருக்கின்றன.

இந்நிலையில்ஒப்பந்தம் முற்றுமுழுதாகக் கிழக்கிலங்கையில் சிறிலங்கா அரசினால் மீறப்பட்டு வருகிறது. இதனால் அரசின் யுத்தநிறுத்தம் குறித்து பலத்த சந்தேகத்தைக்கொண்டுள்ளோம்" என்று திலீபன் தெரிவித்தார். [வா]

### ஜே. ஆருக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சஸாகாவா கராட்டிச் சண்டை வீரருக்கான கறுப்புப்பட்டி 'பிளாக் பெல்ட்')ஒன்றை அணிவித்தார்.

முதல்தர 'கராட்டி' வீரருக்கு வழங்கப்படும் இக்கறுப்புப்பட்டியை திரு.சஸாகாவா ஜனாதிபதியை சந்தித்தபோது வழங்கினார்.

இச் சந்திப்பு சடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி மாளிகையில்இடம் பெற்றது. கறுப்புப்பட்டியை அணிந்து கொண்ட ஜனாதிபதி, ஒரு கராட்டி வீரர் போலவும் அபிநயம் பிடித்தார். [சி]

### இன்று இந்தியாவின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டையில் நடைபெறுகிறது.

தமிழக நிதி அமைச்சரும் பதில் முதல் அமைச்சருமான இரா நெடுஞ்செழியன் தேசியக் கொடியை ஏற்றிவைத்து முப்படைகளின் அணிவகுப்பை ஏற்றுக் கொள்வார்.

சகல மாநில தலைநகர்களிலும் யூனியன் பிரதேசங்களிலும் சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் இடம் பெறுகின்றன.

### சூடுபட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள செல்லம்மா என்பவர் தனது கிணற்றைஇவ்வாரமுற்பகுதியில் இறைத்தபோது ஓர் ஆணின் சடலம் உருக்குலைந்தநிலையில் இருப்பதை கண்டு இந்திய அமைதிகாக்கும் படையினரிடம் அறிவித்தார். அவர்கள் அதனைப்பார்த்து தலையில் சூடுபட்டு இறந்த ஒருவரின் சடலமே அது எனத்தெரிவித்தனர்.

இத்துடன்வேறு பல மனித எலும்புகளும் அக்கிணற்றுள் இருக்கக்காணப்பட்டன.

### பரீட்சைமண்டபத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சைக்கிளில் ஏறித் தலைமறைவானார்.

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் நேற்றுக் காலை 8-00 மணியளவில் இரசாயனவியல்-பகுதி-1க்கான வினாத்தாள் பரீட்சை நேரமே இச்சம்பவம் இடம் பெற்றது.

மேற்படி பரீட்சை மண்டபத்துக்குள் காலியாக இருந்த ஆசனத்திலேயே அந்த அனாமதேய பேர்வழி வந்திருந்தவர் என்றும், அவர் ஒரு பரீட்சார்த்தி என்று நினைத்து பரீட்சை நிலைய உத்தியோகத்தர் வினாத்தாள் ஒன்றை அவருக்குக் கொடுத்துள்ளார் என்றும் கூறப்படுகிறது.

வினாத்தாள் கிடைத்ததும் திடீரென பாய்ந்து ஓடிச் சென்ற அந்தநபர், வாசலில் நின்ற மோட்டார் சைக்கிளில் ஏறி மாயமாக மறைந்து விட்டாராம்.

இந்தநபர் ஏன் இப்படி நடந்து கொண்டார் என்பது மர்மமாக உள்ளது. (மா)


## றிக்கோ சுவீற்ஸ் அன் கிறீம் கவுஸ் தாபனத்தாரின்

## விசேட செய்தி

நம் வாடிக்கையாளர்களுக்கு நீண்ட நாட்களின் பின் மீண்டும் 15-8-87 (இன்று) முதல் காலை உணவாக பட்டர்பாண், ஜாம்பாண், சீனிச்சம்பல், மாசிச் சம்பல். பருப்புக்கறி என்பனவற்றுடன் பாண் பெற்றுக் கொள்ளலாம்.

மதிய உணவாக கோழிப்புரியாணியும் பெற்றுக் கொள்ளலாம். இவைமட்டும அல்ல காலை, மாலை சுடச்சுடப் பாண் விற்பனை செய்கிறார்கள். பலதரப்பட்ட ஐஸ்கிறீம் வகைகளுக்கும், மட்டன் றோல் பற்றிஸ் வகைகளுக்கும்:—

## றிக்கோ சுவீற்ஸ் அன் கிறீம் கவுஸ்

370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி- 0390)

# குரும்பசிட்டி அம்மன் ஆலய புனரமைப்பு

[யாழ்ப்பாணம்]

குரும்பசிட்டி அம்மன் ஆலயத்தைப் புனரமைத்து மீண்டும் பழைய நிலைக்குக்கொண்டு வருவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இது தொடர்பாகக் குரும்பசிட்டி சன்மார்க்கசபை பொது மக்களுக்கும், யாழ். மாவட்ட அரச அதிபருக்கும் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

மேற்படி சபை பொதுமக்களுக்கு விடுத்தள்ள வேண்டுகோளில் பின்வருமாறு தெரிவித்துள்ளது:

குரும்பசிட்டி மக்கள் கடந்த நாலாண்டுகளில் இழந்துவிட்ட பெறற்கரியவற்றுள் அம்பாள் ஆலயம் நிர்மூலமாக்கப்பட்டதற்கு நிகரான துயர்தரும் இழப்பு மற்றொன்று இல்லவே இல்லை.

தென்னிந்திய சிற்பக்கலைஞர் புதுக்கோட்டை இராமையா பிள்ளையால் 1980 இல் நிர்மாணிக்கப்பெற்ற மூலமூர்த்தி கோயிலும் புகழ்பூத்த மரச் சிற்பக் கலைஞர்களான திருநெல்வேலி குடும்பத்தினரால் அமைக்கப்பட்ட தேரும் உயர்ந்த கலைப்படைப்புகள் எல்லோராலும் ஏகோபித்துப் பாராட்டப்பட்டவை. இவை இன்று அழிக்கப்பட்டுவிட்டன.

இத்தனைவருடத் துயர்இழப்புகளின்போதும் அம்பாள் ஆலயமொன்றே எமது புகலிடமாகவும் சாந்தி பீடமாகவும் மிளிர்ந்தது. இன்றோ அது இதயத்தைக் கசக்கிப் பிழியும் காட்சியாகிவிட்டது. தொடர்ந்து துயர்தரும் நிலையமாகிவிட்டது.

ஆலயம் புனருத்தாரணம் செய்யப்படும்வரை அமைதியோ ஆனந்தமோ ஏற்பட வழியில்லை. எனவே தாமதமின்றி மக்கள் துயர்துடைத்து இழந்துவிட்ட ஆலயத்துக்கு நிகராகஅதனைக்கட்டியெழுப்புவதுசைவநன்மக்கள்கடமையாகும். ஆலயத்தைக் கட்டிஎழுப்பக் குறைந்தது 35 இலட்சம் ரூபா வரை தேவைப்படுகிறது. எம் கிராமத்தில் அழிபாடுகளுக்கும் இழப்புகளுக்கும் மத்தியில் இது நினைக்கமுடியாத கடினமான பணியாகும்.

தாமதமின்றிக் கோயிலைப் புனர் நிர்மாணம் செய்ய வேண்டுமென்பதே மக்கள் அவாவாகும்.

# மீண்டும் கட்டாக்காலிகள் நடமாட்டம்

(நவாலி)

நவாலியில் கட்டாக்காலி ஆடு, மாடுகளின் தொல்லை மீண்டும் அதிகரித்துள்ளது.

கடந்த காலங்களில் மேற்படி மிருகங்களைச் கட்டி வைத்து வளர்க்குமாறு இளைஞர்கள் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து இவை கட்டி வைத்து வளர்க்கப்பட்டு வந்தது.

தற்பொழுது இவைகளை உரிமையாளர்கள் காலையில் இருந்து மாலை வரைக்கும் மீண்டும் கட்டாக்காலியாக விடுவதனால் இவை இங்குள்ள வீட்டுவளவுகளுக்குள் அத்துமீறிப்புகுந்து இவர்களின் வீட்டுத்தோட்டப் பகுதிகளை நாசமாக்குகின்றனவாம்.

# தோலகட்டி ஆச்சிரமம் முற்றுகச்சீரழிந்துள்ளது

யாழ்ப்பாணம், புதன் தோலகட்டி ஆச்சிரமத்தில் கடந்த ஐந்து மாதங்களாக முகாமமைத்திருந்த இராணுவத்தினர் கடந்த 5ம் திகதி அங்கிருந்து வெளியேறியுள்ளனர். இதையடுத்து அங்கு சென்ற ஆச்சிரம துறவிகள் ஆச்சிரமமே அடியோடு மாற்றப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் 5ம் திகதி இராணுவத்தினர் இங்கு பலவந்தமாக முகாமைத்தனர். அண்மையில் புதிய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு நிலைமை வழமைக்கு திரும்பியதையடுத்து இராணுவம் அங்கிருந்து வெளியேறியது.

இதையடுத்து கடந்த 6ம் திகதி ஆச்சிரமம் சென்ற துறவிகள் அதன் நிலைகண்டு பெரிதும் கவலையடைந்துள்ளனர். அங்கிருந்த நற்கருணைப் பேழைகள் உடைக்கப்பட்டிருந்தன. மின்வினக்குகளும் அதற்குரிய கருவிகள் அனைத்தும் அகற்றப்பட்டதுடன் அருட்தந்தை பி.ஏ. தோமஸ் ஓ. எம். ஐ. அடிகளாரினதும் செபமாலைத் தாசர்சபையின் உயர்தலைவராக இருந்து மறைந்த அருட்தந்தை ஜோண் பப்ரிஸ்ற் பாக்கியநாதர் சி. ஆர். அவர்களினதும் கல்லறைகள்உடைக்கப்பட்டு ஒருபகுதி திறக்கப்பட்ட நிலையில்காணப்பட்டன. தொழிற்சாலை முற்றாகச் சேதமாக்கப்பட்டு தளபாடங்களும் படுக்கைகளும் நீர் இறைக்கும் இயந்திரங்களும் இன்னும் பல பொருட்களும் கொள்ளையிடப்பட்ட நிலையில் பாழடைந்த மண்டபம்போல ஆச்சிரமம் காட்சிதருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# வீடமைக்கும் போட்டியில் பரிசு பெற்றவர்கள்

[அலுவலக நிருபர்]

தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் நடத்தப்பட்ட வீடமைக்கும் போட்டியில் மாவட்டரீதியில் அராலி மேற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கந்தையா இராமச்சந்திரன் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

இவருக்கான பரிசுத்தொகையான பதினையாயிரம் ரூபா இவரிடம் கையளிக்கப்படவுள்ளதாக வீடமைப்பு அதிகாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப்போட்டியில் யாழ்ப்பாணத்திலுள்ள 116 கிராமோதயசபைகளும், 13 பிரதேச சபைகளும் கலந்து கொண்டதாகவும் 771 வீடுகள் இப்போட்டிக்காககட்டப்பட்டிருந்ததாகவும் தெரிவித்த அதிகாரி இருபாலை கிராமோதய சபையில்தான் அதிகமான வீடுகள் இப்போட்டிக்காக கட்டப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இந்தப்போட்டியில் மாவட்ட பிரதேசசபை கிராமோதய சபை மட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு பரிசுவழங்குவதற்காக மேற்படி அதிகாரசபை யாழ் வீடமைப்பு அதிகாரசபைக்கு இரண்டு லட்சத்து தொண்ணுற்று இரண்டாயிரம் ரூபாவழங்கியுள்ளதாகவும் கூறினர்.

பிரதேசசபை மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட இரண்டாயிரம் ரூபா பணப் பரிசினை பெறும் போட்டியாளர்கள் விபரம்:கரவெட்டி: வல்லிபுரம் சிவனேசன் வல்வெட்டித்துறை, உடுவில்: மார்க்கண்டு சுந்தரலிங்கம் மடத்தடி, நல்லூர்: வேலுப்பிள்ளை இரட்ணராஜசிங்கம் கோண்டாவில், ஊர்காவற்றுறை: கே. எம். கந்தசாமி வேலணை, நெடுந்தீவு: ரி. செபமாலை நெந்தீவு மத்தி, சங்கானை: கே. ராமச்சந்திரன் அராலி, கோப்பாய்: எஸ். அழகராசா நீர்வேலி. சண்டிலிப்பாய்: கே. இராசதுரை மானிப்பாய், சாவகச்சேரி: எஸ். கந்தசாமி மட்டுவில் தெற்கு இவர்களுக்கான பரிசுகள்அந்தந்த உ.அ. அதிபர் பிரிவில் வழங்கப்படும் (ஒ)

# இன்றைய பலன்

மாதம்- ஆடி
திகதி- 30 (1987-8-15)
கிழமை- சனி
திதி- ஷஷ்டி காலை 7·01ன் மேல் ஸப்தமி.
நக்ஷத்திரம்- அச்சுவினி பி. ப. வரை.

மேடம்- இடர்கள்பல தாக்கும் இதயத்தில் எரிமலை குமுறும். எதிலும் பொறுமையைச் சாதிக்கவும்.

இடபம்: துண்டிக்கப்பட்ட உறவு மீண்டும் துளிர்விடும். வாக்கின் மூலம் காரியத்தைச் சாதிப்பீர்கள். பொன் பொருள் சேர்க்கையுண்டு.

மிதுனம்: வேண்டாத விடங்களில் தலையிடாதிருக்கவும். உற்சாகம் குன்றும் எதிலும் பங்கம் விளையும்

கடகம்: வாகன விருத்தியுண்டு. வரவிலும் திருப்தியுண்டு. கல்வியிலும் முன்னேற்றம் காண்பீர்கள்.

சிங்கம்: நீர்ப்பாசனத்துறையில் கடமைபுரிவோர் சிறப்படைவர். அமைதியான வாழ்வும் கிட்டும். பொதுசன மதிப்பும் கிடைக்கும்.

கன்னி: சிலருக்கு நூதன ரோகம் தென்படும். நாள் எல்லாம் அலைச்சல் உறவுகளிலும் வெடிப்பு தோன்றும்.

(7ம் பக்கம் பார்க்க)


## பிரின்டிங் மெஷின் விற்பனைக்கு

நல்லநிலையிலுள்ளதும், உடனடியாக பாவிக்கக் கூடியதுமான 'டபிள் டிமை' சிலிண்டர் மெஷின்உடன் விற்பனைக்குண்டு. விலைவிபரங்களை எமக்குஎழுத்துமூலம் தெரிவிக்கவும். மெஷினை காரியாலய நேரங்களில் பார்வையிடலாம்.

ஈழநாடு லிமிட்டெட்,
த. பெ. எண். 49, யாழ்ப்பாணம்.
[எ2027]



## எமது ஆர் வி. ஜி. பீடி பாவனையாளருக்கு ஓர் முக்கிய அறிவித்தல்

எமது ஆர். வி. ஜி. பீடிக்கும் - கட்டை சிங்கம் பீடிக்கும் எதுவித தொடர்பும் இல்லை. இது பற்றி ஒரு சிலர் பொய்ப்பிரசாரம் செய்து வருவதாக அறிகிறோம்.

எம்மால் தயாரித்து விநியோகிக்கப்படுவது அசல் ஆர். வி. ஜி. பீடிகள் மட்டுமே என்பதை எமது அன்பார்ந்த ஆர்.வி ஜி. பீடி விற்பனையாளருக்கும், பாவனையாளருக்கும், ஆதரவாளர்களுக்கும் அன்புடன் அறியத் தருகிறோம்.

போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

ஆர். வி. ஜி. நிர்வாகம்,
'நிசாம் மகால்',
கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.

போன்: 22064
தந்தி: ஆர். வி. ஜி.
[சி-0236]



## கீன் சென்ரர்

மானிப்பாய்

A/L 88, 89

கலை, வர்த்தகம்

பொருளியல் — வரதராஜன்
கணக்கியல் — மரியதாஸ்
வர்த்தகம் — ரட்ணம்
அளவையியல் — கேசவன்
தமிழ், இந்துநாகரிகம் } காரை சுந்தரம்பிள்ளை

ஆரம்பம் 16–8–87 ஞாயிறு பி.ப. 3–00

பொருளியல்
A/L 88 பகுதி II
வரவு செலவுத்திட்டம்
ஆரம்பம்: 16–8–87 ஞாயிறு பி.ப. 4–00

ஏ-2014


## பின்னுறுதிக் கட்டளைபற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில்

யாம்ப்பாணம் டேவிட் ரோட் 69ம் இலக்கத்தைச் சேர்ந்த சுவக்கீன் யேசுதாசன் என்பவரின் மரணசாதனமில்லா சொத்துக்கள் சம்பந்தமாக மரணச் சொத்து நிர்வாகப் பத்திரம் பெறும் விண்ணப்ப விடயத்தில்

- இறந்தவர்

யேசுதாசன் கைம்பெண் அடைக்கலமேரி, 69, டேவிற் ரோட், யாழ்ப்பாணம்.

- மனுதார்.

வழ. இல. ரி / 4022

மேலே இலக்கம்கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனம் இல்லாத மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கு இணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1987ம் ஆண்டு ஆனி மாதம் 5ந் திகதி காலை 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ் பதியப்பட்டுள்ள பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1987ம் ஆண்டு பங்குனி மாதம் 19ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
க. நாகேந்திரன்.
பதிவாளருக்காக

வரைதல்
செ. மகேசன்
மனுதாரின் சட்டத்தரணி.

காரணங்காட்டும் திகதி 21-08-87வரை நீடிக்கப்பட்டுள்ளது.

(சி-0291)


## விஸ்வமடுக்குளம் வாலிப விவசாயத்திட்ட கூட்டுறவுச் சங்கம், விஸ்வமடுக்குளம்.

### பதவி வெற்றிடம்

### கணக்கு லிகிதர் தரம்–II

மேற்குறிப்பிட்ட பதவிக்கு எமது சங்க மூலம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கணக்கு எழுநுனர் தரம் II

சம்பளம்: 180 - 304
———— ஏனைய படிகளும்
6x10 - 8x8

வயதெல்லை: 20 — 45 வரை

தகைமைகள்:

கணக்கியல் அல்லது வர்த்தக எண்கணிதம் உட்பட 06 பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. (சாதாரண சித்தி அல்லது

கணக்கியலில் திறமைச் சித்தியுடன் கூடிய கூட்டுறவு வேலையாள் (சாதாரணதராதரப்பத்திரம், கணக்கியலில் அல்லது எண்கணிதத்தில் அல்லது வர்த்தக எண் கணிதத்தில் திறமைச் சித்தியுடன் கூடிய க. பொ. த. (சாதாரணதர) இணையுடைய விண்ணப்பகாரருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 01-09-87ம் திகதியன்று அல்லது அதற்கு முதல் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் பொது முகாமையாளர், வி/வாலிப விவசாயத் திட்ட கூ சங்கம், விஸ்வமடுக்குளம் என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்.

வி/வா. வி. தி. கூ. சங்கம்,
விஸ்வமடுச்குளம்.

[சி 0359)

## வடமாகாண வை.எம்.சீ.ஏக்களின் உடனடி நிவாரண ஒழுங்குகள்— 1987

1987-ம் ஆண்டில் இனக்கலவரத்தினுல் தங்கள் குடும்பத் தலைவனை இழந்து அல்லது குடும்பத் தலைவன் அங்கவீனமானதால் தொழில் செய்ய முடியாத நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் இந்நிவாரணத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர். இவர்கள், தாங்கள் நிரந்தரமாக வசிக்கும் இடத்திற்கு அண்மையிலுள்ள பின்வரும் வை. எம். சீ ஏக்களுடன் 25-08-87 இற்கு முன்னர் தொடர்புகொள்ளவும்.

பருத்தித்துறை. பண்டத்தரிப்பு, உடுவில், மானிப்பாய், நவாலி, யாழ்ப்பாணம், பரந்தன், வவுனியா.

எம். தம்பித்துரை.
பொதுக்காரியதரிசி,
வை. எம். சீ. ஏ., யாழ்ப்பாணம்.
[எ-2026]


## ஜீவா மாஸ்கோ பயணம்

(யாழ்ப்பாணம்)

பிரபல எழுத்தாளரும், மல்லிகை ஆசிரியருமான திரு. டொமினிக் ஜீவா சோவியத் யூனியன் பயணமானர்.

சோவியத் பத்திரிகையாளர் சங்கம், சோவியத் எழுத்தாளர் சங்கம் ஆகியவற்றின் விருந்தினராகச் செல்லும் இவர் அங்கு நான்கு வாரங்கள் தங்கியிருப்பார். மாஸ்கோவில் 12 வாரங்கள் தங்கியிருந்து சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கும் செல்வார்.

கருங்கடல் பிரபகசத்தில் அமைந்துள்ள யாழ்ற்று கிளிமியாவிலுள்ள சரித்திரப் பிரசித்திபெற்றாஷ்ப சனிற்ரோறியக்கில் ஓய்வு எடுத்த பின்பு நாடு திரும்புவார்.

# இப்படியும் நடக்கிறது

அண்மையில் தென்னிலங்கையில் மூண்ட வன்செயல்கள் — அதன் பாரிய (அரசு உடமை) இழப்புகள் குறித்து பத்திரிகைகள் வாயிலாக நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

நமது நுவரெலியா நிருபர் பின்வரும் (ருசிகரத்) தகவலை அனுப்பி வைத்திருக்கிறுர்:

''வன்செயல்கள் தென்பகுதியில் தலைதூக்கி, மலையகத்திற்கும் பரவியபோது 'வன்செயல் கும்பல்' நுவரெலியாவில் உள்ள ஜனதிபதியின் விடுமுறை காவல் வாசஸ்தலத்திலும் 'கை' வைக்க முயன்றது.

முன்னேற்பாடாக ஜனதிபதியின் விடுமுறைகால வாசஸ்தலத்துக்கு இராணுவக்காவல் போடப்பட்டிருந்தும் 'முயற்சி' கைவிடப்படவில்லை.

வாசஸ்தலத்தைச் சேதப்படுத்தச்சென்ற கும்பலை காவல் இராணுவம் சந்தித்தது.

''இலங்கை - இந்திய சமாதான உடன்படிக்கையை எதிர்க்கவேண்டாம். நாம் (இராணுவத்தினர்) இனி மேலாவது நிம்மதியாக இருக்க வேண்டும். இதுவரை காலமும் நடந்த யுத்தத்தில் எமது தோழர்கள் பலரை இழந்துவிட்டோம். இனியும் இழப்புகள் ஏற்படுவதை நாம் விரும்பவில்லை. நிலைமையை எண்ணிப்பார்த்து அமைதியுடன் கலைந்து செல்லுங்கள்...'' என்று ஆலோசனை கூறினர்கள் காவல் இராணுவத்தினர். கும்பலும் கலைந்து சென்று விட்டது!''

ஊடுருவி


## கேள்விப்பத்திர அறிவித்தல்

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையில் பின்வரும் வாகனங்களை வாடகைச்சேவையில் ஈடுபடுத்துவதற்கான விண்ணப்பப் பத்திரங்கள் வாகனச் சொந்தக்காரர்கள் ஒப்பந்தக்காரர்கள் ஆகியோரிடம் இருந்து கோரப்படுகின்றன.

1. தொழிற்சாலைப் பாவிப்புக்காக மோட்டார் வண்டி (Motor Car) ஒன்று.
2. தொழிற்சாலைப் பாவிப்புக்காக 06 தொடக்கம் 09 பயணிகள் பிரயாணம் செய்யக்கூடிய வான் (Van) ஒன்று.
3. தொழிற்சாலை பாவிப்புக்காக ரக்றர் (Tractor) ஒன்று.

மேற்குறிப்பிட்ட கேள்விப்பத்திர விண்ணப்பங்களை 1987-08-19-ம் திகதி பிற்பகல் 2-00 மணிவரை தொழிற்சாலை விநியோக உத்தியோகத்தரிடம் இருந்து பெற்றுக்கொள்வதோடு இதரவிபரங்களையும் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திர விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுதல் 1987ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20ம் திகதி பிற்பகல் 2-30 மணியுடன் முடிவடையும்.

தொழிற்சாலை முகாமையாளர்,
காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை,
காங்கேசன்துறை.
(எ 2021)


## இன்றைய பலன்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

துலாம்: உவகைதரும் சம்பவங்கள் இடம்பெறும் சிலர் வாழ்வில் காதலும் அரும்பும் திடீர் பிரயாணமும் ஏற்படலாம்

விருச்சிகம்: வணிகர்கள் வாழ்வு சோதனைநிறைந்து காணப்படும். கடன் தொல்லை அதிகரிக்கும். சிந்தனையை ஒரு வழிப்படுத்தி செயலாற்றவும்.

தனுசு: குடும்ப வாழ்வு சுமுகமாகயிருக்கும் எண்ணிய கருமம் கண்ணியமாய் முடியும். பிதாவழியிலும் பிணக்குகள் மறையும்.

மகரம்: ஒளிவீசும் வாழ்வு உறவினர் மத்தியில் ஒற்றுமை மலரும். தொழிலிலும் புதிய உத்வேகம் காணப்படும்.

கும்பம்: தொழில் லாபமீட்டும். புத்திரர் புகழீட்டும் உயர் கல்வி நாட்டமேற்படும்.

மீனம்: வாழ்க்கை ஒரு சுமையாகத் தோன்றும். நெஞ்சமும் புண்ணுகி நெடுமூச்சும் வெளிக்கிளம்பும், புதிய முதலீட்டைத் தவிர்க்கவும்.

திருமலை
வே. இரவீந்திரன்

கடையிற்சுவாமி கோயில்

# இலட்சார்ச்சனையும் விசேட ஹோமமும்

யாழ்ப்பாணம், சனி

யாழ். நீராவியடி கடையிற்சுவாமி சமாதிச் சிவாலயத்தில் 17ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 10 நாட்களுக்கு இலச்சார்ச்சனை விசேட ஹோமம் திருவிழா என்பனவும் நடைபெறும்.

தினமும் பகல் அபிஷேகம் நியாசபூர்வ சகஸ்ரநாம அர்ச்சனை ஹோமம் என்பனவும் மாலை நியாசபூர்வ சகஸ்ரநாம அர்ச்சனை ஹோமம் வசந்த மண்டப பூசை உள் வீதியுலா சமய விரிவுரைகள் என்பனவும் நிகழும்.

11ம் நாள் வியாழக்கிழமை பகல் சங்காபிஷேகமும், இரவு திருக்கல்யாணம், வெளி வீதி உலா என்பனவும், 12ம் நாள் பகல் அன்னதானமும் மாலை பிராயச்சித்தம், வைரவர் மடை என்பனவும் நிகழும்.


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

யாழ். - மட்டுநகர் - கல்முனை வரை தினசரி மினி பஸ் சேவை

# 15-08-87 சனி முதல் ஆரம்பம்

# "காங்கேசன் எக்ஸ்பிரஸ்"

பயணக் கட்டணம்: 125/-

★ துரித பயணம் ★ சௌகரியமான சேவை ★ பாதுகாப்புக்கு உத்தரவாதம்

– பிரயாணிகள் நலன் கருதி –

யாழ். தெல்லிப்பளையில் இருந்து மட்டுநகர் கல்முனை வரை.

புறப்படும் நேரம்: 6–30 ராஜா தியேட்டரில் இருந்து.

(1) ராஜா புக்கிங் சென்ரர், ராஜா தியேட்டர், யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 23180.

(2) ஸ்ரீ சாயி ஸ்ரோர்ஸ், 141, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 22660

(3) ராஜா புக்கிங் சென்ரர், ராணி தியேட்டர், யாழ்ப்பாணம்.

குடாநாட்டில்:- (4) தெல்லி என்ஜினியரிங், கே. கே. எஸ். வீதி, தெல்லிப்பளை.

(5) சன்யோ கோப்பி அன் கூல்பார், 16, நவீன சந்தை, பஸ் நிலையம் முன்பாக, சுன்னுகம்.

## ராஜா புக்கிங் சென்ரர்,

ராஜா தியேட்டர்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 23180.

மேலதிக விபரங்களுக்கு: தலைமைச் செயலகம், வடபிராந்திய மினி பஸ் சேவைச் சங்கம், கொக்குவில்.

(ஏ-2028)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

சனிக்கிழமை 15-8-87

## யாழ்.மின்சார நிலையம்தொடர்ந்து இயங்கும்

[யாழ்ப்பாணம்]

யாழ்.ஆஸ்பத்திரிக்கு அருகாமையிலுள்ள மின்சார நிலையம் நாளைமறுதினம் திங்கட்கிழமை தொடக்கும் இரவு பகலாக இயங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இராணுத் தாக்குதல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து அண்மைக் காலமாக இந்த மின்சார நிலையம் இயங்காதிருந்தது தெரிந்ததே. [மா)

## இலங்கை– இந்திய

[1ம் பக்கத் தொடர்ச்சி]

புகளைக் கொண்டிருந்தது.

இதனல் இந்தியா சீண்டப்பட்டு, தனது பாதுகாப்புக்கு இந்த தொடர்புகள் குந்தகமாக அமையும் என இந்தியா நினைப் து நியாயமாகும்'' என்ருர்.

● 'ஜே. ஆர். - ராஜீவ் ஒப்பந்தம் ————

# இலங்கைத் தமிழர் போராட்டத்தை நசுக்கும் ஒரு சதித்திட்டம்!'

## புரட்சிகரமாக்ஸிஸ்ட் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டத்தை அழித்தொழிப்பதற்காக இலங்கை ஜனுதிபதியும் இந்தியப் பிரதமரும் மேற்கொண்ட இரகசியசதித்திட்டத்தின் விளைவே ஜே. ஆர். - ராஜீவ் சமாதான ஒப்பந்தம்.

பல தசாப்தங்களாக சிங்களவர்களால் நசுக்கப்பட்டு பெரும் இன்னல்களை அனுபவித்துவரும் தமிழ் இனத்தின் விடுதலைக்காகப் போராடும் தமிழ் போராளிகளிடமுள் ஆயுதங்களை ஜெயவர்த்தன அரசிடம் பலவந்தமாகக் கையளிப்பதற்காகவே இந்த ஒப்பந்தத்தின்படி ராஜீவ் இந்தியத் துருப்புக்களை இலங்கைக்கு அனுப்பியுள்ளார்.

இவ்வாறு புரட்சிகர மார்க்ஸிட் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது,

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஜே ஆர் - ராஜீவ் ஒப்பந்தம் விடுதலைக்காகப் போராடும் தமிழ் மக்களின் அங்கீகாரம் இன்றியே செய்யப்பட்டுள்ளது.

### உயிர்த்தியாகம்

ஆயிரக்கணக்கான தலைசிறந்த தமிழ்ப் போராளிளின் உயிர் தியாகத்தின் பின்னும் பல்லாயிரக்கணக்கான அப்பாவித்தமிழ்மக்கள் சிங்கள ஆயுதப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட பின்னரும் தீரத்துடன் போராடி வரும் தமிழ் போராளிகளிடமிருந்து அவர்களது ஆயுதங்களைப் பறித்து அவர்களைத் தோற்கடிக்கச் செய்வதற்கு இந்த ஒப்பந்தத்தின் மூலம் ராஜீவ் ஜே. ஆருக்கு உதவி உள்ளார்.

### இந்திய ஆதிக்கம்

தெற்காசியாவில் இந்திய ஆதிக்கம் மேலோங்கியுள்ள நிலையை இந்திய ஒப்பந்தம் இந்தியப் பிரதமருக்கு ஏற்படுத்திக்கொடுத்துள்ளது.

தமிழ் மக்களுக்கு வடக்கு கிழக்கில் அமைக்கப்படும் மாகாண சபைகள் மூலம் பிரதேச சுயாட்சி வழங்கப்படும் என ஜே ஆர் கூறியுள்ளது ஒருதந்திரக்கூற்று.

### சட்டம் தயாரில்லை

போராளிகளை பலவந்தமாக ஆயுதங்களைக் கையளிக்கச் செய்த போதிலும் ஜே. ஆர். ராஜீவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போதிலும் அதிகாரப்பரவலாக்கலுக்குரிய மாகாண சபைகளுக்கான நகல் சட்டம்கூட இனமும் தயாரிக்கப்படவில்லை.

ஜெயவர்த்தன தனது தமிழ் இன விரோத கொள்கைகளை ஒருபோதும் மாற்றவே மாட்டார்.

ஜெயவர்த்தனவும் அவரது அமைச்சரவையும் ஐ. தே. க. எம். பிக்களும் முன்எப்போதையும்விட தமிழர்களுக்கு விரோதிகளாகவே இருப்பார்கள்.

### இந்தியப்படை

ஒப்பந்தத்தின் மோசமான பகுதி இந்தியப்படைகள் இலங்கையில் நிலைகொண்டிருப்பதே.

தமிழர்களைப் பாதுகாப்பதற்காக இந்தியப்படைகள் வடக்கில் நிலைகொண்டிருக்கவில்லை வெறுத்து ஒதுக்கப்படும் ஜெயவர்த்தன அரசை மீண்டும் தழைக்கச் செய்யவே அவை வடக்கில் உள்ளன.

## கிழக்கில்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டாம் கட்டம் இன்றும் தொடர்தும் நாளையும் பலாலி இராணுவமுகாமில் இடம் இடம்பெறும்.

ஈரோஸின் இந்த ஆயுதக் கையளிப்பின் பொருட்டு ஈரோஸ் இயக்கத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரான திரு.சங்கர் இந்திய இராணுவ ஹெலிகாப்டர் மூலம் கிழக்கு மாகாணத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

தொடர்ந்து திரு. சங்கர் தலைமையில் 20 பேர் கொண்ட ஈரோஸ் இயக்கத்தினர் தமது ஆயுதங்களை கையளித்தனர்.

பலாலியிலும் திரு. சங்கரே ஈரோஸ் இயக்கத்தினரின் ஆயுதங்களை கையளிப்பார் என்று தெரிவிக்கப்பட்டது. (வா)

## நிர்வாகம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ந்த இடைக்கால நிர்வாகம் அடுத்த மாத முற்பகுதியில் அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுடில்லியில் இதுதொடர்பாக தற்போது துரிதமாக பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகிறது. இடைக்கால நிர்வாகத்தில் பத்துப் பேர்கொண்ட அனைத்து தரப்பு உறுப்பினர்களும் நியமிக்கப்படுவார்கள்.

இதற்கமைய 7 தமிழர்களும் இரு முஸ்லிம்களும், ஒரு சிங்களவரும் நியமிக்கப்படுவர். தமிழர்கள் தரப்பு நியமனம் குறித்து எழுந்துள்ள சர்ச்சை தொடர்பாகவே தற்போது புதுடில்லியில் பேச்சுக்கள் இடம் பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## மட்டக்களப்பு...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நூற்றுக் அதிகமான இராணுவ வாகனங்களில் வந்த இந்தியப் படையினரை வழி நெடுகிலும் மக்கள் பெருந்திரளாகக் கூடிநின்று வரவேற்றனர்.

## கிளிநொச்சியில் இரட்டைக்கொலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஐந்தாம்வாய்க்காலில் இரட்டைக் கொலைச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது.

சகோதரர்களான வேலு. சக்திவேல் (27 வயது), வேலு இராசசேகரம் (25 வயது) ஆகியோரே கொலையுண்டவர்களாவார்.

இரவு வேளை இனந்தெரியாத கோஷ்டியொன்றினல் இவர்கள் அழைத்துச்செல்லப்பட்டு பொல்லுகளால் தாக்கி கொலை செய்யப்பட்டதாக விசாரணையில் தெரியவந்தது

இந்தமரணங்கள் தொடர்பாக கிளிநொச்சி நீதவான் வரதராசா ஸ்தல விசாரணையை மேற்கொண்டார் பிரேத பரிசோதனையை கிளிநொச்சி மாவட்டவைத்திய அதிகாரி டாக்டர் கதிரவேற்பிள்ளை நடத்தினர். மரண விசாரணை தொடர்கிறது சாட்சிகளை பொலிஸ் சார்ஜன்ட் விநாயகமூர்த்தி.ஆஜர் செய்தார்.

## தமிழ் இளைஞர் கொலை முஸ்லிம் இளைஞர் கடத்தப்பட்டார்

(திருமலை)

திருகோணமலையில் கடந்த சில தினங்களுக்குமுன் இரு கோஷ்டியினருக்கிடையே எழுந்த பிரச்னை ஒன்றில் தமிழ் இளைஞர் ஒருவர் சுட்டு கொல்லப்பட்டார். முஸ்லிம் இளைஞரொருவர் கடத்தப்பட்டார்.

இனந்தெரியாத நபர்களைக் கொண்ட இரு குழுக்களுக்கிடையிலான இந்தப் பிரச்னையில் தமிழ் இளைஞரொருவர் சைக்கிள் திருத்த வேலைக்குச் சென்ற சமயம் அவர் கடத்தப்பட்டுப் பின் சுட்டுக்கொல்லப்பட்டார். இவர் கைகள் கட்டப்பட்ட நிலையிலேயே சுட்டுக்கொல்லப்பட்டார்

கடத்தப்பட்ட முஸ்லிம் இளைஞரை விடுவிக்க 50.000 ரூபா வழங்கவேண்டுமெனவும் கடத்திய குழுவினர் கேட்டுள்ளனர். (சி

## சவூதியில் வேலை இழந்த யாழ் இளைஞர்கள்

(சவுதியிலிருந்து எம். சுபேந்திரன்)

சவுதி அரேபியாவில் உள்ள துறைமுகம் ஒன்றில் பணியாற்றிய யாழ்ப்பாண இளைஞர்கள் உட்பட நானூறிருகும் அதிகமான இலங்கையர் தமது வேலையை இழந்து நாடு திரும்பினர்கள்.

ஜன்பு என்ற இடத்திலுள்ள துறைமுகத்தில் பணியாற்றியவர்களே இலங்கை திரும்பியவர்களாவர். இவர்களில் யாழ்ப்பாண இளைஞர்களே அதிகம் பேராவர்.

இவர்களைத் துறைமுகத்தில் வேலைக்கு அமர்த்தியகம்பனிச்கு தொடர்ந்தும் துறைமுக ஒப்பந்த வேலை இவ்வாண்டு கிடைக்காமல் போனதாலேயே இவர்கள் வேலை இழக்க வேண்டிய அவல நிலைக்கு உள்ளானர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜெடா விமான நிலையத்தில் இருந்து இலங்கை புறப்பட்ட இவர்களில் யாழ்ப்பாண இளைஞர்கள் பெருங்கவலையுடனேயே நாடு திரும்பினர்கள்.

## மரண அறிவித்தல்

### தியாகராசா சிறிசுப்பிரமணியம்

[ஓய்வுபெற்ற O. I. C. ஆனையிறவு உப்பளம்]

கடந்த புதன்கிழமை இறைவனடி சேர்ந்த தியாகராசா சிறிசுப்பிரமணியம் அவர்களின் பூதவுடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பது மணிக்கு அன்னரின் இல்லத்திலிருந்து கோம்பயன்மணல் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும் இல: 4, ஆருவது ஒழுங்கை, பலாலி வீதி, [ஆலடிச் சந்தி] கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

சி–2039

### செல்வி சிவமலர் நடேசபிள்ளை

புங்குடுதீவு 9-ம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் தற்போது 11-ம் வட்டாரத்தில் வசிப்பவருமாகிய செல்வி சிவமலர் நடேசபிள்ளை 13-ம் திகதி வியாழக்கிழமை காலமானர். இவர் நடேசபிள்ளை இராசேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகளும், கன்னிகா நாகேஸ்வரி, முருகதாஸ் (சுவிஸ்), சிவதாஸ் [சுவிஸ்), கண்ணதாஸ் [ஜேர்மனி]. யெகதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகேந்திரன் என அழைக்கப்படும் கனகசிவம் (ஜேர்மனி), புனிதம் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும், மயூதரன், பரணீதரன், தீபன் ஆகியோரின் சித்தியும், சுவீதரனின் அத்தையுமாவார். அன்னரின் பூதவுடல் 14-08-87 வெள்ளியன்று பிற்பகல் 4 மணிக்கு மணற்காடு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இதனை உற்ருர், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

சி0381 தகவல்: நவம்.

### திருமதி இலட்சுமி நாகமணி

தோற்றம்: 10-9-1922 மறைவு: 10-8-1987

அராலி வடக்கைச் சேர்ந்த திருமதி இலட்சுமி நாகமணி கடந்த 10-8-87 திங்கட்கிழமை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற திரு. சி. நாகமணி அவர்களின் அன்பு மனைவியும், தர்மலிங்கம், தவமணிதேவி, ஞானயோகராணி, விமலாதேவி, ஜெயக்குமார் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத்தாயாரும், மு. வேலாயுதம் (மலேசியா), சீ. பத்மநாதன் (கனடா), ந. பாலச்சந்திரன் [இலண்டன்]. த. இராசமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும், சுசந்தி, சுகன்யா, சுகிதா, மீரா, சுபத்திரா ,துஷ்யந்தி, சிந்துஷா, தமிழ்வாணன் ஆகியோரின் அன்புப் பேத்தியாரும், இளையாச்சி, சின்னம்மா, நல்லம்மா, சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னரின் இறுதிக்கிரியைகள் அராலி வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் சனிக்கிழமை [இன்று] 15-8 87 மாலை 2 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் அராலி பொதுமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலைச் சகலரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்: நாகமணி குடும்பத்தினர். சி-0393

## மரண அறிவித்தல்

### நயினுதீவு திருமதி தங்கமுத்து பொன்னையா

திருமதி தங்கமுத்து பொன்னையா 1987 - 08 - 14-ல் காலமாகிவிட்டார். அன்னர் நயினுதீவு காலஞ்சென்ற திரு. முருகேசு பொன்னையா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு. தயாபரம்பிள்ளை, திரு. கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் அன்புத்தாயாரும், திருமதி யோகம்மா, திருமதி விசாலாட்சி ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி கௌரியாம்பாள் சுந்தரலிங்கம், இராசேஸ்வரி, அமிர்தகௌரி, சுரேஸ்குமார், சிவகுமார், மகேஸ்வரன், தெய்வகலா, மகேந்திரன். ஸ்ரீதரன் (மணி), ரவீந்திரன், கிருஷ்ணலதா, ஜெகசிற்பியன், விசாகருபன், அங்கயற்கண்ணி ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவர். அன்னரது இறுதிக்கிரியைகள் 1987 - 08 - 16 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் கோண்டாவிலில் நடைபெறும். உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவு செய்து இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

இங்ஙனம்,

"கைலயங்கிரி'' பொ. கிருஷ்ணபிள்ளை.
ஞானவயிரவர்வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

சி-0397

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B/10036/81. P O. Box: 49. Telegram: Eelanadu. Telephone: 22389, 24126.